# இலக்கு

இதழ் 67

வாராந்த மின்னிதழ்

மார்ச் 01, 2020

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTER, USA



Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1





## புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களே பாரம்பரிய கலைகளை பெரிதும் மதிக்கின்றனர்

-சிவசுப்ரமணியம் துஜான்-

## இரும்புக் கரங்களால் இறுக்கப்படுகின்றன எங்கள் குரல் வளைகள்

மட்டுரோன்





## சுயமாக மீளமுடியாத பொருளாதார அரசியல் நெருக்கடிக்குள் சிறிலங்கா

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## உலங்கு வானூர்தியால் உயர்ந்த இந்திய-அமெரிக்க படைத்துறை ஒத்துழைப்பு


வேல் தர்மா



## வனவளமே எம்மின வளம்

" உலக வனவள தினம் 3 மார்ச் 2020 "

விக்கிரமன்




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

# தமிழ் மக்களிடம் அதிக பணம் அறவிடும் யாழ். அனைத்துலக விமான நிலையம்



யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் திறக்கப்பட்ட புதிய அனைத்துலக விமான நிலையம், தென்னிந்தியாவுக்கான விமான சேவைகளை மேற்கொண்டு வருகின்ற போதும், அது தமிழ் மக்களிடம் அதிக பணத்தை அறவிடுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கொழும்பில் இருந்து சென்னைக்கான விமானப் பயணம் ஒரு மணி நேரமும், 20 நிமிடங்களும் கொண்டது. அதற்கான கட்டணம் 24,531 ரூபாய்கள், ஆனால் 33 நிமிடங்கள் எடுக்கும் யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவை 32,823 ரூபாய்களாகும்.

சிறீலங்கா அரசினதும், அதிகாரிகளினதும் இந்த பாரபட்ச நடவடிக்கையினால் தமிழ் மக்கள் கொழும்பு சென்றே சென்னைக்கு செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நட வடிக்கையானது யாழ். விமான நிலையத்தை விரைவில் மூடும் நிலைக்கு கொண்டு வரும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, பலாலி அனைத்துலக விமான நிலையத்தை மேலும் தரமுயர்த்தும் நடவடிக்கைக்கு 300 மில்லியன் ரூபாய்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சுரேன் ராகவனை புறக்கணித்தது கூட்டமைப்பு



எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட விரும்புவதாக வட மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் விடுத்த வேண்டுகோளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேட்பாளர்கள் தொடர்பான விபரங்கள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு ராகவனிடம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இன்று(01) வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறும் கூட்டத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு தனது பிரச்சாரத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும், அவர்களின் கடந்த நான்கு வருட செயற்பாடுகள் தொடர்பில் எம். ஏ சுமந்திரன் உரையாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொரோனா வைரஸ்
### கட்டுப்படுத்த முடியாது திண்டாடும் உலகம்



சீனாவின் வூகான் மாநிலத்தில் உருவாகிய கொரோனா வைரஸ் தற்போது உலகம் எங்கும் பரவி வருவதுடன் அதனை கட்டுப்படுத்த முடியாது பல நாடுகள் திண்டாடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் 2,900 பேர் பலியாகியுள்ளதுடன், 85,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தென்கொரியா அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாள் ஒன்றிற்கு 594 பேர் புதிதாக தொற்றுதலுக்கு உட்பட்டு வருகின்றனர். தற்போது வரையில் அங்கு 3150 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், 17 பேர் இறந்துள்ளனர்.

தற்போதைக்கு சீனாவுக்கு அடுத்தபடியாக தென்கொரியாவே அதிகமான கொரோனா வைரஸ் தொற்றாளர்களை கொண்டுள்ளது.

மோசமாக பாதிக்கப்பட்ட இடங்களில் இராணுவம் அனுப்பப்பட்டு கிருமி நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கு அடுத்த நிலையில் இத்தாலியும், யப்பானும் உள்ளன, இத்தாலியில் 1,128 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 29 பேர் பலியாகியுள்ளனர். யப்பானில் 236 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5 பேர் பலியாகியுள் ளனர்.

## சிறீலங்கா மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை வழங்க இஸ்ரேல் திட்டம்

சிறீலங்காவுடன் மேற்கொள்ளப்படும் உடன்பாட்டின் மூலம் அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த உடன்பாட்டில் சிறீலங்காவின் தொழில்துறை அமைச்சரும், இஸ்ரேலின் உள்நாட்டு அமைச்சரான ஆரியத் மகுப் டெரியும் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த உடன்பாட்டின் மூலம் சிறீலங்காவின் பொருளாதாரம் மேம்படும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

## பொதுத் தேர்தலில் 270,000 புதிய வாக்காளர்கள்




எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 25ஆம் நாள் சிறீலங்காவில் இடம் பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் புதிதாக 270,000 வாக்களர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக சிறீலங்கா தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இடம் பெற்ற அரச தலைவர் தேர்தலை விட 271,789 அதிக வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். 15,992,096 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் தான் அதிக வாக்காளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் வன்னி மற்றும் திருமலை மாவட்டங்களில் மிகவும் குறைவான வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும், வன்னியில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும், மட்டக்களப்பில் 5 உறுப்பினர்களும், திருமலையில் 4 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா தீர்மானத்தை சிறீலங்கா பின்பற்ற வேண்டும் - நீட்டா பிரென்ஞ்



ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய தீர்மானத்தில் இருந்து சிறீலங்கா அரசு வெளியேறியது தமக்கு ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக கனடா, ஜேர்மனி, பிரித்தானியா, வட மசடோனியா மற்றும் மொன்ரோநீக்ரோஆகிய நாடுகள் தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் சார்பாக பிரித்தானியாவின் மனித உரிமைகளுக்கான அனைத்துலக தூதுவர் நீட்டா பிரென்ஞ் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன நல்லிணக்கப்பாடு, நீதி விசாரணை, பொறுப்புக் கூறுதல் போன்றவை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 என்ற தீர்மானத்தை நாம் தொடர்ந்து பின்பற்றவே விரும்புகிறோம்.

இந்த தீர்மானத்தை சிறீலங்கா அரசு பின்பற்ற வேண்டும் என்பதுடன், மனித உரிமை ஆணைக்குழுவுடன் தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் தீர்மானம், அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் சிறீலங்காவில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்விசார் சமூகம் என்பன சுதந்திரமாக செயற்படும் நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அந்த நிலை மாற்றம் அடைந்து வருகின்றது. அங்கு ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு அச்சுறுத்தல் தோன்றியுள்ளது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இது மேலும் அதிகரிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

• • •

## 225 நாடாளுமன்ற ஆசனங்கள் 226 அரசியல் கட்சிகள்

சிறீலங்காவில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 156 புதிய அரசியல் கட்சிகள் ஆர்வமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக தம்மை பதிவு செய்வதற்கு 156 அரசியல் கட்சிகள் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். சிறீலங்காவில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட 70கட்சிகளுடன் சேர்த்தால் மொத்தமாக 226 கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஆனால் நாடாளுமன்ற ஆசனங்கள் 225 ஆகும் என தெரிவிக்கப்படுகின்றது.

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த வாரம் வெளிவந்த இலக்கு மின்னிதழில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களை அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் தலைவரென மட்டும் குறிப்பிட்டிருந்ததற்காக

**இலக்கு மின்னிதழ் குழு மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றது.**

## சிறீலங்கா வெளியேறினாலும்
### ஐ.நா தீர்மானம் நடைமுறையில் இருக்கும்



*ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானங்களில் இருந்து சிறிலங்கா வெளியேறினாலும், அது நடைமுறையில் இருக்கும். தீர்மானம் இல்லாது போகாது என சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.*

*தீர்மானத்தின் இறுதி வடிவம் தொடர்பில் நான் சிறிலங்காவின் அன்றைய அரச தலைவர் மைத்திரிபால சிறீசேனாவுடன் விரிவாக ஆராய்ந்திருந்தேன். அப்போது நாம் இருவரும் நியூயோர்க்கில் உள்ள ஒரே விடுதியில் தான் தங்கியிருந்தோம்.*

*அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் அமெரிக்காவின் தூதுவர் மற்றும் பிரித்தானியாவின் தூதுவர் ஆகியோருடன் இருந்தார். நாம் பிரதமருடன் தீர்மானம் தொடர்பில் பேசும் போது அவர்களும் கூட இருந்தனர்.*

*அதன் பின்னரே மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தெரிவித்தோம். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் சிறிலங்கா நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.*

*30/1 மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட தீர்மானங்களான 34/1 மற்றும் 40/1 ஆகியவற்றில் இருந்து சிறிலங்கா வெளியேறினாலும் அது நடைமுறையில் இருக்கும். தீர்மானம் இல்லாது போகாது.*

*சிறீலங்கா அரசு ஒத்துழைக்காது விட்டாலும், மனித உரிமைகள் ஆணைக்குழு சிறீலங்கா தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பிக்கும். எனவே சிறீலங்காவின் ஒத்துழைப்புக்கள் இன்றி உடன்பாடு செயற்படும்.*

*தனிநபர்கள் மீதான தடைகள் ஏற்கனவே நடைமுறைக்கு வந்துள்ளது. சிறீலங்கா இராணுவத்தளபதி மீது அமெரிக்கா பயணத்தடையை கொண்டு வந்துள்ளது. இந்த தடைகள் மேலும் அதிகரித்தால், சிறீலங்காவின் பொருளாதாரம் அதிக பாதிப்புக்களை சந்திக்கும். இது சிறீலங்கா மக்களை அதிகம் பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளர்.*

## இலக்கு

### அனைத்துலக விசாரணையின் அவசியத்தை அனைத்துலக சமூகம் உணரத் தலைப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தில் இருந்து வெளியேறத் திட்டமிட்ட சிறீலங்கா அரசு, அதற்கான எதிர் விளைவுகள் அனைத்துலக மட்டத்தில் எவ்வாறு இருக்கும் என்பதைக் கணிக்கத் தவறி விட்டது.

சிறீலங்காவின் அறிவிப்புக்கு எதிராக மேற்குலக நாடுகள் பல தமது எதிர்ப்புகளை வெளியிடத் தொடங்கியுள்ளன. பிரித்தானியா மற்றும் கனடா உட்பட ஐந்து நாடுகளைக் கொண்ட இணை அனுசரணை நாடுகள் தமது கவலையை வெளியிட்டதுடன், தீர்மானத்தை தாம் தொடர்ந்து பின்பற்ற விரும்புவதாக தெரிவித்துள்ளன.

இந்த நாடுகளின் வரிசையில் தற்போது பிரான்ஸ் இணைந்துள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தில் இருந்து சிறீலங்கா விலகினாலும், தீர்மானம் நடைமுறையில் இருக்கும் என பிரான்ஸ் தெரிவித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் தனது கவலையை வெளியிட்டுள்ள அதேசமயம், அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் அது தனது கருத்தை தெரிவித்துள்ளது.

மேற்குலக நாடுகள் ஒருபுறம் தமது கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில் அனைத்துலக மன்னிப்புச் சபை ஒரு படி மேலே சென்று அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கையை வெளியிட்டுள்ளது. தமிழ் மக்கள் விரும்புவதும் அதுவே.

அதாவது ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியது போல, சிறீலங்காவின் உள்ளக விசாரணை என்பது உலகினால் நிராகரிக்கப்பட்ட ஒன்று. அதாவது சிறீலங்காவின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அங்கு ஒருபோதும் உள்ளக விசாரணைகளோ அல்லது பொறுப்புக் கூறல்களோ வெற்றி பெற்ற வரலாறு இல்லை.

அதற்கான முக்கிய காரணம் அங்கு நிலவும் அரசியல் ஒடுக்கு முறைகள், சுதந்திரமற்ற நீதிப் பொறிமுறை, கருத்துச் சுதந்திரத்தின் மீதான அடக்கு முறை என்பவற்றை குறிப்பிடலாம். எனவே அனைத்துலகத்தின் தலையீடுகள் இன்றி சிறீலங்கா அரசும் அதன் படையினரும் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட போர்க் குற்றங்கள் மீதான நீதி விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்பது தமிழ் மக்களின் ஆணித்தரமான கருத்தாக இருக்கின்றது.

அதனையே தற்போது அனைத்துலக சமூகமும் மெல்ல மெல்ல உணரத் தலைப்பட்டுள்ளது. சிறீலங்காவில் வாழும் பௌத்த சிங்கள மக்கள் தவிர்ந்த ஏனைய இனங்களின் இயல்பான வாழ்வு தொடர்பான ஒரு உடன்பாட்டை கூட உள்நாட்டில் நிறைவேற்ற முடியாத நிலையே அங்கு காணப்படுகின்றது.

அதற்கு சிறந்த உதாரணமாக இந்தியாவின் 13 ஆவது திருத்தச் சட்டம், அது தற்போது உள்ள நிலை, அதனால் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் நிலை என்பவற்றை நாம் இங்கு குறிப்பிடலாம்.

அதாவது, சிறீலங்காவில் இடம் பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு, அதன் போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான படுகொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பான விசாரணைகள், அதற்கான நீதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால்,அதற்குரிய ஒரு வழி அனைத்துலக விசாரணை மட்டும் தான்.

அதனை தற்போது அனைத்துலக சமூகம் உணரத் தலைப்பட்டுள்ளது. எனவே இந்த புரிதலை வலுப்படுத்தி சிறீலங்கா அரசு மீது அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை ஒன்றை உருவாக்க தமிழ் மக்கள் அனைவரும் ஒரு அணியில் பணியாற்ற வேண்டும்.

தமிழ் இனம் தன்னிடம் உள்ள கல்வி வளம்,இராஜதந்திரத் தொடர்புகள், அரசியல் தொடர்புகள், நிதி வளம், மனித வலு, இளைய சமூகத்தின் சக்தி என்பவற்றை ஒருங்கிணைத்து மிகப்பெரும் ஜனநாயக போர் ஒன்றுக்கு தம்மை அனைத்துலக மட்டத்தில் தயார்படுத்த வேண்டிய காலமிது.

**- ஆசிரியர்**

# புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களே பாரம்பரிய கலைகளை பெரிதும் மதிக்கின்றனர்

-சிவசுப்ரமணியம் துஜான்-



**சுதந்திர அரங்கு, அரங்காலயா, கலை நிலா ஆகிய மூன்று குழுக்களும் இணைந்து வவுனியாவில் பாரம்பரிய கலை நிகழ்வை நிகழ்த்தி வரும் ஒரு குழுவினர். இக்குழுவைச் சேர்ந்த சிவசுப்ரமணியம் துஜான் என்பவர் இலக்கு மின்னிதழிற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**

**கேள்வி:**

**எப்படியான கலைகளை நீங்கள் வெளியுலகிற்கு கொண்டு வருகின்றீர்கள்?**

**பதில்:**

இரண்டு மூன்று வகையான கலைகளை நாங்கள் வைத்திருக்கின்றோம். அவற்றில் நவீன கலைகள். இதில் மேடை நாடகங்கள், வீதி நாடகங்கள், பயிற்சிப் பட்டறைகள், விழிப்புணர்வு சார் நாடகங்கள், ஆற்றுகைகளை மேற்கொள்வது ஒரு வகையானவை. தற்போது நாங்கள் ஆரம்பித்திருக்கும் பாரம்பரிய கலைகள், ஒப்பீட்டளவில் முன்னர் இருந்தது போல் இல்லாது மந்த நிலையில் இருப்பதை பெருமளவில் காணக்கூடியதாக இருக்கின்றது.



இப்போது மீதியாக இருக்கும் கலைகளை அடுத்த சமுதாயத்திற்கு கையளிக்கும் ஒரு பணியை நாங்கள் செய்ய வேண்டும். அது தான் இப்போது சாத்தியமானது. இந்தக் கலைகளை ஆற்றிக் கொண்டிருக்கும் கலைஞர்களை ஊக்குவித்து செயற்படுத்தும் சாத்தியங்கள் இப்போது எம்மிடம் குறைவாக உள்ளது. எதிர்வரும் காலங்களில் அந்தக் கலைஞர்கள், அவர்களின் மண்ணில் கலைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் நாங்கள் ஆவலாக இருக்கின்றோம்.

இப்போது அவர்கள் மேற்கொள்ளும் கலைகளை மெருகூட்டி அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணியை மேற்கொள்ளவுள்ளோம். முதலில் பாரம்பரிய கலையான கிராமியப் பாடல்களையே இப்போதைக்கு அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வேலைகளை மேற்கொண்டுள்ளோம்.

**கேள்வி:**

**தற்போது பல்வேறு கலைகள் அழிவடைந்து கொண்டு செல்கின்றது. அந்த வகையில் அண்மைக் காலங்களில் மேடைகளில் பறை இசையை மேற்கொண்டுள்ளீர்கள். அந்த பறை இசை எவ்வாறு தமிழ் மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது. அதற்கு அவர்களின் ஆதரவு எவ்வாறு உள்ளது?**

**பதில்:**

சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்த பறையிசை எங்களின் சமூகத்தில் இணைந்துள்ளது. தெய்வங்கள்கூட தோற்கருவிகளை அதிகம் வைத்துள்ளனர். பிற்பட்ட காலத்தில் பறையிசை என்பது ஒரு முக்கியமான இசைக் கலையாகவும், இசைக் கருவியாகவும் வந்திருக்கின்றது.

வாழ்க்கையின் முழு அர்த்தப்பாடுகளையும் கொண்டதாகவே இந்தப் பறை இசை விளங்குகின்றது. எங்களின் ஆதிக் கலைகளை எங்களின் அடுத்த சமூகத்திற்கு கொண்டு செல்வது, பேணுவது முக்கியம் என்ற ரீதியில் நாங்கள் எடுத்துச் செல்கின்றோம். இப்போது எங்களிடம் இருக்கும் அணியினர் பறை பற்றிய அறிவு உள்ளதால், எங்களுக்குள் முரண்பாடுகள் இல்லாது கலையை எடுத்துச் செல்ல முடிகின்றது.



இருப்பினும் வெளிச் சமூகங்கள் மத்தியில் சில கஸ்டங்கள் இருக்கின்றது. அது என்னவெனில் பறையை திறந்த வெளிகளில் பாவிப்பதா? கோவில்களில் பாவிப்பதா? என்ற ஒரு பிற்போக்கான எண்ணம் உள்ளது. இது தவறில்லை. ஏனெனில், எங்களுக்கு முன்னர் இருந்த சமூகம் அவ்வாறு வாழ்ந்து பழகி விட்டார்கள். தற்போதுள்ள இளைய சமூகத்தின் ஊடாக அடுத்த சமூகத்திற்கு கொண்டு செல்லும் போது சில மாற்றங்கள் ஏற்படும் எனக் கருதி நாங்கள் இதை எடுத்துச் செல்கின்றோம்.

**கேள்வி**

**இந்தக் கலைகளை எதிர்கால சந்ததியினரிடம் எடுத்துச் செல்வதற்கு எவ்வாறான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளீர்கள்?**

**பதில்:**

நாங்கள் இப்போது முதலில் செய்ய வேண்டியது இந்தக் கலையை ஆற்றுகைப்படுத்துவதேயாகும். இரண்டாவது இந்தக் கலையை முறையாக ஆசானின் கீழ் இருந்து படித்த ஒரு சில கலைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களைக் கொண்டு விரும்பும் ஏனைய கலைஞர்களுக்கு பழக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதை பழக்கினால் சந்தோசமாக இருக்கும்.

**கேள்வி:**

**தாயகத்தைப் பொறுத்தவரையில் கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதா? இல்லையா?**

**பதில்:**

அது எந்தக் கலையைப் பொறுத்தது என் பதில் இருக்கின்றது. ஒவ்வொரு கலைகளுக்கும் ஒவ்வொரு அங்கீகாரங்கள் இருக்கின்றன. சினிமா கூட ஒரு கலைதான். ஆனால் ஈழத்தைப் பொறுத்த வரையில் சில கலைகள், சில கலைஞர்கள் புறக்கணிக்கப்படும் ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆனால் அதற்காக கலையை செய்யாது இருக்க முடியாது. பெரும்பாலும் புறக்கணிக்கப்படுவது கிராமியக் கலைகளை மேற்கொள்ளும் கலைஞர்களே ஆகும். ஆனால் அதைப் பற்றி நாங்கள் கவலைப்படத் தேவையில்லை. நாங்கள் அந்தக் கலைகளை மேற்கொள்வது எங்களின் ஆத்மாத்த சந்தோசத்திற்காகவும் மக்களுக்கு இதை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவுமே. இதனால் எங்களுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை.

**கேள்வி**

**உங்களின் கலைகளுக்கு ஆதரவு எவ்வாறு இரு க்கின்றது?**

**பதில்:**

இந்தக் கலை பற்றிய ஓரளவு புரிதல் இருக்கின்றவர்களதும், கலை மீது நாட்டம் உள்ளவர்களினதும் ஆதரவு தான் இருக்கின்றது. ஒப்பீட்டளவில் நாங்கள் ஒரு நிகழ்ச்சி செய்யப் போகின்றோம் என்று சொல்லி கூப்பிடும்போது, பெரும்பாலானோர் வருவதில்லை. குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் வவுனியாவில் கட்டணம் செலுத்தி நாடகம் பார்க்கும் முறையை உருவாக்கியிருந்தோம். முதல் முறையாக அரங்கேற்றிய நாடகத்திற்கு 200 பார்வையாளர்கள் வந்த போதும், 3பார்வையாளர்களுக்காக நாங்கள் நாடகம் போட்ட சூழலும் இருக்கின்றது. இது எந்தளவிற்கு புரிதல் இருக்கின்றது என்பது தெரியவில்லை. இந்தப் புரிதலை எங்கள் குடும்பத்திலிருந்தும், பாடசாலைகளிலிருந்தும் ஏற்படுத்திக் கொண்டு வரும் போதுதான் அந்தக் கலை பற்றிய புரிதல் ஏற்படுத்தப்படும்.



நாங்கள் ஒன்றரை இலட்சம் செலவு செய்து ஒரு நாடகத்தை அரங்கேற்றினால், அதில் கட்டணமாக வரும் பணம் ஏழாயிரம், அல்லது எட்டாயிரம் தான். மிகுதி செலவுகள் சில ஆதரவாளர்கள் ஊடாகவே கிடைக்கும். 70% இற்கும் மேற்பட்ட செலவுகள் எங்கள் சொந்த செலவி லிருந்து செல்வதாகவே இருக்கும்.

இதை ஒரு தொழில் முறையான குழுவாக உருவாக்க முயற்சிக்கின்றோம். தொழில் முறையான குழுவாக இருக்கும் போது, பார்வையாளர்களை அதிகம் உருவாக்கிக் கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

**கேள்வி:**

**தாயகத்தைவிட புலம்பெயர்ந்த தேசங்களில் இந்தக் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பலர் இருக்கின்றனர். எனவே புலம்பெயர் தேசத்திலிருக்கும் உறவுகள் உங்கள் கலைகளை வளர்ப்பதற்கு எவ்வாறான**

தொடர்ச்சி 12ம் பக்கம்



# நுண்நிதிக் கடனால் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் தாயகம்.

**கா**லங்களில் போரும் பொருளாதார நெருக்கடிகளும் அதன் பின்னரான இடப்பெயர்வுகள், இழப்புக்கள் என்பவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறியுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வாழ்விட வசதிகளை ஏற்படுத்த வேண்டியமை, வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியமை என பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு கடன்களைப் பெற்று அவற்றை மீளச் செலுத்த முடியாமல் ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வங்கிகளிலும் தனியார் கம்பனிகளிலும் நுண்கடன் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பல்வேறு வட்டி வீதங்களில் தொழில் தேவைகள் கருதி பெற்றுக் கொள்ளும் கடன்கள் அந்த நோக்கத்திற்காக செலவிடப்படாமல் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிலையில் அவற்றை மீளச் செலுத்த முடியாமல் பல குடும்பங்கள் உள்ளன.

இதனை விடவும் தேவை கருதி வங்கிகளில் கடன் பெற்று அந்த தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்ட போதும் அதனால் போதிய வருமானம் கிடைக்காமையினால் கடன்களை மீளச் செலுத்த முடியாமலும் காணப்படுகின்றன.

இவ்வாறான பல்வேறுபட்ட கடன் சுமைகளால் மீள்குடியேறிய குடும்பங்களிடையே குடும்பப் பிணக்குகள், குடும்ப வன்முறைகள், தற்கொலைகள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன.

யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் மீள்குடியேறிய மக்களின் தேவை கருதி நிதி நடவடிக்கைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்களில் பல்வேறுபட்ட பாதக, சாதக நன்மைகள், தீமைகள் ஏற்பட்டுள்ளன என மத்திய வங்கியினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிளி நொச்சியில் தற்போது அரச, தனியார் வங்கிகள் என 21 வரையான வங்கி கிளைகள் இயங்கி வருகின்றன.




கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் நான்கு வங்கிகள் மாத்திரமே இயங்கி வந்தன. இதனைவிட நிதி நிறுவனங்கள், குத்தகை கம்பனிகள் என அழைக்கப்படக் கூடிய லீசிங் கம்பனிகள். இதனை விட நுண்நிதி கம்பனிகள் எனப்படுகின்ற மைக்றோ பினான்ஸ் நிறுவனங்கள் இயங்குகின்றன. அத்துடன் கிராமிய வங்கிகள், சமுர்த்தி வங்கிகள் என்பனவும் இயங்கி வருகின்றன. அத்துடன் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள், அடைவு பிடிப்பவர்கள் என பல தரப்பட்டவர்கள் நிதி நடவடிக்கைகளை கையாளுகின்றனர்.

இவற்றில் வங்கிகளில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் இலகு படுத்தப்பட்ட வகையில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் வங்கிகளுடாக வழங்கப்பட்ட கடன்களில் பத்து வீதமான கடன்கள் மீளச் செலுத்தப்படாமல் உள்ளன.

இவ்வாறு கடன் களை செலுத்த முடியாதவர்கள் அதிகமாக நுண் கடன் நிதி நிறுவனங்களை நாடி அதிகூடிய வட்டிக்கு கடன்களைப் பெற்று அதனை செலுத்த முடியாமல் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கோ- ரூபகாந்

அதாவது வங்கிகளில் அல்லது நிதி நிறுவனங் களில் கடன்களை பெற் றுக் கொண்டு அவற்றை உரிய காலத்தில் மீளச் செலுத்தப்படாமல் இருக்குமாயின் கடன் பெற்றவரின் பெயர் தே.அ.அட்டை எண் என்பன கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் அவரது நிதி ஒழுக்கம் எவ்வாறுள்ளது என அவதானித்து எதிர்காலத்தில் கடன்களையோ அல்லது ஏனைய நிதி நடவடிக்கைகளையோ மேற்கொள்ளமுடியும்.



இவ்வாறான நிலையில் மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட 46 நிதி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 26 இற்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்கள் தற்போது வடக்கில் இயங்கி வருகின்றன. இவை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களாகும்.

இதனைவிட மத்திய வங்கியின் ஆளுகைக்குட்படாத நுண்பாக நிதி நிறுவனங்களும் இயங்குகின்றன. இவ்வாறான நிதி நிறுவனங்கள் கொடுகடன் தகவல் பணியகத்தின் தகவல்களில் பெயர் விபரங்கள் இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன பின் தங்கிய கிராமங்களில் உள்ள மக்களின் வீடுகளுக்குச் சென்று மிகவும் இலகுவான வகையில் அதிகூடிய வட்டி வீதத்தில் கடன்களை வழங்கி வருகின்றன. அத்துடன் குறித்த நிதி நிறுவனங்களில் சேமிப்புக்களுக்கான வட்டி வீதங்களும் அதிகமாகவே உள்ளன.

இவ்வாறான நிதி நிறுவனங்களில் கடன்களை பெற்றுக் கொள்பவர்கள் அதனை மீளச் செலுத்த முடியாமல் பல்வேறு சிரமங் களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் கடன்களால் குடும்பப் பிணக்குகள், குடும்பங்களில் பிரிவுகள், தற்கொலைகள் என்பன இடம் பெற்று வருகின்றன. இவ்வாறான நுண்கடன் திட்டங்கள் தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டிய தேவையும் அதனை தெளிவுபடுத்த வேண்டிய தேவைகளும் எல்லோரிடத்திலும் உள்ளது.

இவ்வாறான கடன்களைப் பெற்றுக் கொண்டவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகும் நிலையினை கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் அவதானிக்க முடிந்துள்ளது.

அதாவது கடந்த வாரம் கிளிநொச்சி பொன்னகர் 72 வீட்டுத் திட்டத்தில் இவ்வாறு நுண் கடன் திட்டத்தின் மூலம் கடன்களைப் பெற்றுக் கொண்ட ஏழு வரையான பயனாளிகள் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினது கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் தமது முறைப்பாடுகளை முன்வைத்ததுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் தமது முறைப்பாடுகளையும் பதிவு செய்துள்ளனர்.



அதாவது வீட்டுக்கே வந்து கடன்களை வழங்கும் தனியார் நிதி நிறுவனங்களில் இருந்து கடன்களை பெற்று கொண்டதாகவும் அவற்றை செலுத்தி வரும் நிலையில் தற்போது தொழில் வாய்ப்பின்மை, பொருளாதார நெருக்கடி, வருமானமின்மை காரணமாக அவற்றை உரிய காலத்திற்குள் செலுத்த முடியா துள்ளது. இதற்காக அவர்களிடம் நாங்கள் தவணைகளை கேட்கின்றோம். அவர்கள் அதற்கு உடன்படுவதில்லை.

இந்த கடன்களை செலுத்துமாறு வற்புறுத்தி தினமும் இரவு 10.00 மணிவரையும் அதற்கு பின்னரும் வீடுகளிலேயே நிற்கின்றனர். இதனால் வயது வந்த பிள்ளைகளை வைத்திருக்கின்றோம். பெண்களாகிய நாங்களும் குடும்பத்திலும் சமுகத்திலும் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தமது முறைப்பாடுகளில் தெரிவித்துள்ளனர்.


குறித்த கிராமத்திற்குச் சென்று இவ்விடயம் தொடர்பாக பலரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, வவுனியா நெடுங்கேணி மற்றும் முல்லைத்தீவு மல்லாவி மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் இயங்கி வருகின்ற நிதி நிறுவனங்கள் அதி கூடிய வட்டிக்கு கடன்களை வழங்கியிருக்கின்றன.

இதில் 90 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களே இவ்வாறான கடன்களைப் பெற்றுள்ளன. அத்துடன் சிலர் நிதி நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற்று அதனை அதிகூடிய வட்டிக்கும் அதனைவிட ஒரு தொகையினை தாம் எடுத்துக் கொண்டு மிகுதியை ஒப்பந்த அடிப்படையில் சிலருக்கு கொடுத்து விட்டு முழுத்தொகையினையும் அந்த பணத்தினைப் பெற்றுக் கொண்டவர் கட்டுகின்ற நிலைமையினைக் கூட அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு நுண் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களை பெற்றுக் கொள்பவர்களில் அதிகூடிய தொகையினர் பெண்ணாகவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி மாவட்டத்தில் கிளைகள் எதனையும்


தொடர்ச்சி 12ம் பக்கம்

# இரும்புக் கரங்களால் இறுக்கப்படுகின்றன எங்கள் குரல் வளைகள்



மட்டுரோன்

இலங்கையில் நடைபெற்ற ஆட்சி மாற்றம் மீண்டும் ஊடகவியலாளர்களையும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் இலக்கு வைத்து செயற்படும் களத்தை உருவாக்கி கொடுத்துள்ளது. கோட்டபாய ராஜபக்ச அரசாங்கத்தின் பௌத்த பேரினவாத சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்கும் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது.




கோட்டபாய ராஜபக்ச அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களில் 30/1 & 40/1 இருந்து வெளியேறியுள்ளது.

இதைவிட இலங்கையின் சிவில் நிர்வாக செயற்பாடுகளில் இராணுவம் நேரடியாக களம் இறக்கப்பட்டுள்ளது. அதற்கான அதிகாரத்தை கோட்டபாய அரசாங்கம் இராணுவத்திற்கு சட்ட ரீதியாக வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் போக்குவரத்து பொலிஸார் முதல் வேலை வாய்ப்புக்கான நேர்காணல் வரை அனைத்து நடவடிக்கைகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் செயற்பட்ட ஆயுதக் குழுக்கள், அதாவது இன்று வரை இராணுவ ஒட்டுக் குழுக்களாக செயற்பட்டு வந்து, இலங்கை அரசிடம் சம்பளம் பெற்று வந்த குழுக்கள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளன. அவர்களது முதலாவது இலக்கு ஊடகவியலாளர்களே.

அதுவும் தமிழர்களின் உரிமைப் போராட்டம், அவர்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்குமுறைகள், மண்பறிப்பு, அதிகார துஸ்ப்பிரயோகம், ஊழல் நடவடிக்கைகள், ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் என்பன தொடர்பில் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்த மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் இன்று அரச மற்றும் ஆயுதக் குழுக்களினால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவ்வூடகவியலாளர்கள், ஊடக சுதந்திரம் மற்றும் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், காணாமல் போன ஊடகவியலாளர்களுக்காக ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை நடத்துவது தொடர்பிலும் அவர்கள் அச்சுறுத்தல்களை எதிர் நோக்க வேண்டியவர்களாக உள்ளனர். கடந்த காலங்களில் மறைமுகமாக செயற்பட்டு வந்த இந்த குழுக்கள் தற்போது நேரடியாக களத்தில் இறங்கி செயற்பட ஆரம்பித்துள்ளன.

சில ஊடகவியலாளர்கள் மீது தொடர்ச்சியாக பொலிஸ் விசாரணை மற்றும் புலனாய்வுத் துறையின் விசாரணைகள் நடத்தப்பட்டன. அவர்களுக்கு எதிராக பயங்கரவாத பிரிவு மற்றும் சில புலனாய்வு அதிகாரிகள் ஊடாக பல பொய்யான தகவல்களை உள்ளடக்கிய கோவைகள் பல தடவைகள் அனுப்பப்பட்டுள்ளன.

இதன் காரணமாக சிலர் கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவினரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அது மட்டுமின்றி அதனை தொடர்ந்து ஊடகவியலாளர்கள் புலனாய்வுத்துறை அதிகாரிகளால் பின் தொடரப்பட்டதுடன், ஊடகவியலாளர்களின் விபரங்களை சில புலனாய்வு அதிகாரிகள் மறைமுக மாகவும் சில அரச அதிகாரிகள் ஊடாகவும் திரட்டி வருகின்றனர். அத்துடன் சில ஊடகவியலாளர்கள் புலிகளுடன் தொடர்பை வைத்துள்ளார்கள் என்று கூறி அவர்களது வங்கி கணக்கு உட்பட வாழ் வாதாரம் வரை அலசி ஆராய்ந்து கொழும்பிற்கு தகவல்களை அனுப்பி இருந்தனர்.

இதன் தொடர்ச்சியாகவே அண்மையில் மட்டு ஊடக அமையத்திற்குள் சில ஊடகவியலாளர்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள் போடப்பட்டிருந்தன.




ஆனால் இது குறித்து பெரிதும் அலட்டிக் கொள்ளாத பாதுகாப்பு தரப்பு இதனை எடுத்த எடுப்பிலேயே வெளிநாடு செல்வதற்கு திட்டமிட்டு செய்யப்பட்ட செயல் என்று சிலரூடாக பொய்ப் பரப்புரைகளை பரப்பி வந்துடன், அச்சுறுத்தல்களுக்கு உள்ளான ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தவே இல்லை.

சம்பவத்தை நீர்த்துப்போகச் செய்தல் அல்லது திசை திருப்ப செய்தல். இதை தற்போது இலங்கையில் ஒரு உத்தியாகவே சில குழுக்களை வைத்து அரசாங்கம் கையாண்டு வருகின்றது.

பயங்கரவாத விசாரணைக்கு சென்று வந்தால் கூட அதனை வெளிநாடு போவதற்கு பயங்கரவாத விசாரணைக்கு சென்று வந்துள்ளார்கள் என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது. அதனை நம்பும் ஒரு கூட்டமும் உண்டு.

இதைவிட இது போன்ற சம்பவங்களினால் இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியில் அபகீர்த்தி ஏற்படும் என்பதற்காகவும் அவ்வாறு ஏற்படாது இருப்பதற்காக இது போன்ற சம்பவங்களை மூடி மறைத்து பூசி மெழுகும் தரப்புக்களும் உண்டு.

இதனால் உண்மையாக பாதிக்கப்படும், உயிர் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மிகுந்த மன அழுத்தத்திற்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர்.

**அண்மையில் மட்டு ஊடக அமையத்திற்குள் சில ஊடகவியலாளர்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தல் விடுக்க ப்பட்ட துண்டு பிரசுரங்கள் போடப்பட்டிருந்தன.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்களது ஊழல் செயற்பாடுகளுக்கு எதிராக செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்களை முடக்க வேண்டிய தேவை சில குழுக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களில் ஊழல் செய்த உயர் அரச அதிகாரிகள் முதல் காணி மோசடி செய்பவர்கள், முன்னாள் ஆயுத குழுக்கள், சில அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்ற போர்வையில் இயங்கும் சில அரச புலனாய்வாளர்கள், சில வெளிநாட்டு உளவு முகவர்கள் என பலரும் உள்ளனர்.

இவர்கள் தற்போதைய அரசாங்கத்தில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி உண்மைகளை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி முடக்கி அவர்களை ஊடக செயற்பாடுகளில் இருந்து இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

அதற்காக பல்வேறு வழிகளில் முயன்று வருகின்றனர். கடந்த காலங்களில் மறைமுகமாக செயற்பட்டு வந்த இந்த நபர்கள் தற்போது நேரடியாக செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

சில ஊடகவியலாளர்கள் மீது பல விசாரணைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் ஊடாக அச்சுறுத்தியும் அதனால் குறித்த ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை முடக்க முடியவில்லை என்பதற்காக தற்போது மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களை வீசி குடும்ப அங்கத்தவர்களை உளவியல் ரீதியாக அச்சுறுத்தி குடும்ப உறுப்பினர்கள் ஊடாக குறித்த ஊடகவியலாளர்களை முடக்கும் வகையில் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சென்ற வாரம் கூட ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டிற்கு சென்ற புலனாய்வுத்துறை அதிகாரிகள் அவரை விசாரணை செய்ய வேண்டும் என்று தேடியுள்ளனர். இவ்வாறு புலனாய்வுத்துறை அதிகாரிகளை பல தடவைகள் ஏவிவிட்டும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துகின்றனர்.

• • •

# மோடியை உற்சாகப்படுத்திய அமெரிக்க அதிபரின் இந்திய விஜயம்



**அ**மெரிக்க அதிபர் ட்ரம்ப் இரண்டுநாள் அரசுமுறைப் பயணத்தை மேற்கொண்டு கடந்த 24ஆம் திகதி திங்கட்கிழமை முதன் முறையாக இந்தியா சென்றார். இவருடன் இவரின் மனைவி மெலனியா, மகள் இவாங்கா, மருமகன் ஜரேட் ஆகியோருடன் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் றொபேட் ஓ பிரைனும் உடன் சென்றிருந்தனர். இவரின் மகளும், மருமகனும் அமெரிக்க அதிபரின் மூத்த ஆலோசகர்களாவர்.

காலை 11.40 மணியளவில் குஜராத் அஹமதாபாத் விமானநிலையத்தை சென்றடைந்த அமெரிக்க அதிபர் குழுவினர் அங்கிருந்து மதியம் 1.05 மணிக்கு அகமதாபாத்தில் புதிதாக கட்ட ப்பட்டுள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் கிரிக்கெட் மைதானத்துக்கு சென்றனர். அங்கு ட்ரம்ப்பை வரவேற்று 'நமஸ்தே ட்ரம்ப்' நிகழ்ச்சி நடை பெற்றது. இதில் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர். இந்தியாவின் 28 மாநிலங்களின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மோடி அமெரிக்கா சென்றிருந்த போது அவரை வரவேற்பதற்கு 'ஹவ்டி மோடி' நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அதிபரின் வருகையை ஒட்டி குஜராத் அஹமதாபாத் நகரில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. 25,000இற்கும் மேற்பட்ட பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் அங்குள்ள சிறிய குடிசைகளை மறைத்து பெரிய மதில் ஒன்று கட்டப்பட்டதாகவும் தகவல்கள் வெளிவந்தன. 6அடி முதல் 8அடி உயரமான இந்த பெரிய மதிலிற்குப் பின்னால் 500 குடிசைகளில் 2500இற்கும் மேற்பட்டோர் வசித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

பின்னர் ட்ரம்ப், அவரது மனைவி மெலனியா ஆகியோர் சபர்மதி ஆச்சிரமத்திற்கு சென்றனர். அங்கு மகாத்மா காந்தியின் படத்திற்கு அஞ்சலி செலுத்தினர். அதன் பின்னர் ஆசிரமத்தில் உள்ள ராட்டையில் நூல் நூற்றனர். அப்போது ராட்டை குறித்து பிரதமர் மோடி அவர்களுக்கு விளக்கம் அளித்தார்.

பின்னர் ஆக்ராவில் உள்ள தாஜ்மகாலை பார்வையிடுவதற்காக ஆக்ரா விமான நிலையம் சென்ற அவர்களை உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் வரவேற்றனர். அங்கு இந்திய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் 3 ஆயிரம் கலைஞர்கள் திரண்டு இசை இசைத்து, நடனமாடி ட்ரம்பை வரவேற்றனர். அங்குள்ள வருகைப்பதிவு புத்தகத்திலும் ட்ரம்ப் கையெழுத்திட்டார்

**கல்யாணி**

தாஜ்மகாலில் குரங்குகளின் தொல்லைகள் அதிகமாக காணப்படுவது வழக்கம். ட்ரம்ப் இன் வருகையையொட்டி அந்தக் குரங்குகளை விரட்டு வதற்காக சிங்கவால் குரங்குகள் அங்கு வரவழைக்கப்பட்டன. இந்த சிங்கவால் குரங்குகளை கண்டால் மற்றய குரங்குகள் வெளியேறி விடுமாம்.



24ஆம் திகதி இரவு டில்லியின் சர்தார் பட்டேல் மார்க் பகுதியில் உள்ள, ஐ.டி.சி. மவுரா ஓட்டலில்உள்ள 'தகிராண்ட் பிரசிடென்சியல்சூட்' அல்லது 'சாணக்கியா சூட்' என்ற ழைக்கப்படும், 4,600 சதுர அடி கொண்ட அறையில், டிரம்ப் தங்கினார். இங்கு ஒரு நாள் இரவு தங்குவதற்கான வாடகை, 8 லட்சம் இந்திய ரூபாய்களாகும். டிரம்ப் மற்றும் குடும்பத்தாருக்கு விரும்பிய உணவை சமைக்க தனியாக சமையல் கலை நிபுணர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த ஓட்டலை சுற்றிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

மறுநாள் காலை ட்ரம்ப் இற்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின்னர் மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். அடுத்து டிரம்ப்- மோடி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். இரு நாட்டு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் உடனும், பின்னர் இருவரும் தனித்தனியாகவும் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இருதரப்பு இராணுவ ஒப்பந்தம் டிரம்ப், மோடி முன்னிலையில் கையெழுத்தானது. பின்னர் இருவரும் ஒன்றாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

பத்திரிகையாளர்களிடம் பேசிய ட்ரம்ப் இந்தியாவுக்கு 3 பில்லியன் டாலர் மதிப்பிலான (சுமார் ரூ.21 ஆயிரத்து 600 கோடி இந்திய ரூபாய்கள்) மேம்படுத்தப்பட்ட அமெரிக்க இராணுவ தளபாடங்களை வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்து நாங்கள் இந்தியாவுடனான இராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்தி உள்ளோம். இதன்படி இந்தியாவுக்கு, உலகிலேயே தலை சிறந்தவை என கருதப்படும் எம்.எச்-60 ரோமியோ ஹெலிகொப்டர்கள் (24 எண்ணிக்கை), ஏ.எச்-64, அப்பாச்சி ஹெலிகொப்டர்கள்(6 எண்ணிக்கை) ஆகியவற்றை அமெரிக்கா வழங்கும். பாகிஸ்தான் எல்லையில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தனிச்சிறப்பு வாய்ந்த ஹெலி காப்டர்களை இந்திய ராணுவத்துக்கு விற்க உள்ளோம் என்றும் கூறினார்.

குடியுரிமைப் பிரச்சினை தொடர்பாக பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு, அது உள்நாட்டு பிரச்சினை அதை பிரதமர் மோடி அவர்கள் பார்த்துக் கொள்ளுவார் என்றும் கூறினார்.

இதற்கிடையில் ட்ரம்ப் இன் மனைவி மெலனியா புதுடெல்கியிலுள்ள ஓர் அரச பள்ளி மாணவர்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன், அவர்களுடன் கலந்துரையாடியும் உள்ளார்.



பின்னர் மாலை 3 மணியளவில் டெல்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு ட்ரம்ப் சென்றார். இரவு விருந்திற்காக குடியரசுத் தலைவர் மாளிகைக்கு சென்று, இரவு 10 மணியளவில் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

ட்ரம்ப் இன் இந்திய விஜயம் குறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இன் இந்தியப் பயணத்தினால் இரு நாடுகளுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்பு மேலும் வலுப்படும் என்றும் கூறியுள்ளது.

மேலும் ட்ரம்ப் இன் இந்திய வருகை இந்தியப் பிரதமர் மோடிக்கு வலுச்சேர்ப்பதாகவே கூறவேண்டும். தான் உள்நாட்டில் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி வல்லரசு நாடுகளோ, ஏனைய நாடுகளோ எதுவும் கேட்காது என்ற நிலையை ட்ரம்ப் இன் வருகை மோடிக்கு கொடுத்திருக்கின்றது.

இதன் மூலம் இந்தியாவும் உலகில் ஓர் வல்லரசாக முயற்சிக்கும் நாடு தான் என்பதை இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இற்கு எடுத்துக் கூறியிருக்கின்றார் என்றே கருதவேண்டியுள்ளது.

• • •



# சுயமாக மீளமுடியாத பொருளாதார அரசியல் நெருக்கடிக்குள் சிறீலங்கா

**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**

**ஐ**.நா தீர்மானத்தில் இருந்து தாம் விலகுவதாக சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது. ஜெனீவாவில் இடம்பெறும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரிலேயே சிறீலங்கா தனது முடிவை தெரிவித்துள்ளது.

சிறீலங்காவில் தற்போது ஆட்சியில் உள்ள அரசின் தலைவர் கோத்தபாயா ராஜபக்ச உட்பட பெருமளவான படைத் தளபதிகளும், படையினரும் போரின் போது தமிழ் மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்களை மேற்கொண் டவர்களே.

எனவே ஐக்கிய நாடுகள் சபை ஊடாக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் தொடருமாக இருந்தால், சிறீலங்கா அரசு மேற்குலகத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் செல்ல வேண்டும் அல் லது போர்க்குற்ற விசாரணைகளை சந்திக்க வேண்டும்.



ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான முன்னைய அரசு மேற்குலகம் சார்பான போக்கை கொண்டிருந்தாலும், சிறீலங்காவில் ஏற்படும் அரசியல் மாற்றம் தமது வியூகங்களில் பின்னடைவை ஏற்படுத்தலாம் எனக் கணித்த அமெரிக்கா, அவர்களின் ஊடாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தீர்மானம் 30/1ஐ கொண்டு வந்திருந்தது. அதன் பின்னர் தனது நடவடிக்கையை முன்னெடுப்பதில் அமெரிக்கா பின்வாங்கியது போல நடித்தாலும், தனக்கு சார்பான நாடுகளான பிரித்தானியா, மசடோனியா, மொன்ரோநிக்ரோ, ஜெர்மனி மற்றும் கனடா ஊடாக இந்த தீர்மானத்தை பலப்படுத்தியிருந்தது.

ஒருபுறம் தீமானம் கொண்டு வரப்பட்டபோதும், மறுபுறம் மிலேனியம் சலஞ்ச் என்ற படைத் துறை உடன்பாட்டை சிறீலங்கா அரசு முன்வைத்திருந் தது. இந்த உடன்பாடு தொடர்பில் ரணில் அரசு மென்போக்கையே கடைப்பிடித்திருந்தது. ஆனால் உடன்பாட்டின் மூலம் திருமலை தொடக்கம் கொழும்பு வரையிலான 7 மாவட்டங்கள் அமெரிக்க படையினர் வசம் செல்லும் என்பதை அறிந்த இந்தியா விழித்துக் கொண்டது.

சிறீலங்காவில் ஒரு ஆட்சி மாற்றத்தை இந்தியா கொண்டு வந்து. அமெரிக்காவின் உடன்பாட்டை முறியடிக்க இந்தியா வகுத்த வியூகம் தான் கோத்தபாயாவின் அரசியல் வெற்றி.

தேர்தலுக்கு முன்னர் தனது உடன்பாட்டை நிறைவு செய்ய அமெரிக்கா முனைந்த போதும், பௌத்த துறவிகளை ஏவிவிட்ட எதிர்த்தரப்பு அதனை முறியடித்திருந்தது

தனது திட்டம் தோல்வியடையும் எனக் கணிப்பிட்ட அமெரிக்கா, தனது இரண்டாவது திட்டத்தை கையில் எடுத்துள்ளது. அதுவே மனித உரிமைகள் அமைப்பில் தற்போது எதிரொலிக்கின்றது.

சிறீலங்கா அரசு தீர்மானத்தில் இருந்து வெளியேறியதை ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் ஆணையாளர் நேரிடையாக விமர்சித்துள்ளார், இணை அனுசரணை நாடுகள் அதற்கு எதிராக கொதித்து எழுந்துள்ளன. சிறீலங்கா வெளியேறினாலும் தாம் அதில் இருந்து வெளியேறப் போவதில்லை என மிரட்டியுள்ளன.

அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களும் தற்போது தீவிரமாக செயற்படுகின்றன. சிறீலங் கா அரசு மேற்கொண்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது அனைத்துலக மன்னிப்புச் சபை.

படையினருக்கு வழங்கப்படும் இராஜதந்திர பதவிகள் மூலம் அவர்களுக்கு போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து விதிவிலக்கு பெறமுடியும் என நம்கின்றது சிறீலங்கா அரசு. எனவே தான் பல படையினருக்கு பொது அதிகாரம் வழங்கப்படுகின்றது. ஆனால் சிறீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவீந்திர சில்வா மீது அமெரிக்கா கொண்டு வந்த பயணத் தடை, சிறீலங்கா படை அதிகாரிகளின் உளவியலை சிதைத்துள்ளதாக தெரிவிக்கின்றார் கொழும்பைத் தளமாகக் கொண்ட இராஜதந்திரி ஒருவர்.

சிறீலங்கா மீது பொருளாதாரத் தடை கொண்டு வரப்படலாம் என சிறீலங்கா அரசு அச்சம் அடைகின்றது. அதன் வெளிப்பாடே தம் மீது கொண்டு வரப்படும் பொருளாதாரத் தடைக்கு எதிராக தமது நட்பு நாடுகளான சீனா மற்றும், ரஷ்யா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தும் என சிறீலங்காவின் அமைச்சர் கெஹெலியா ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்லாது, ஐ.நா பொதுச்சபையில் தீர்மானம் கொண்டுவரப் பட்டால், சீனா தலைமையில் ஆபிரிக்க, ஆசிய நாடுகளையும், இந்தியா தலைமையில் ஆசிய நாடுகளையும் மற்றும் அரபு நாடுகளையும் ஒருங்கிணைத்து அதனை முறியடிக்கலாம் என நம்புகின்றது சிறீலங்கா அரசு.




அதேசமயம் இந்த வாரம் அமெரிக்காவின் மிலேனியம் சலஞ்ச் உடன்பாட்டை சிறீலங்கா அமைச்சரவை நிராகரித்துள்ளது. இது அமெரிக்காவின் திட்டத்திற்கு விழுந்த பலத்த அடியாகும். ஆனால் தாம் சிறீலங்கா அரசின் முடிவுக்கு காத்திருப்பதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தமது உடன்பாடு 480 மில்லியன் டொலர்களைக் கொண்டது எனவும், அதனால் 11 மில்லியன் சிறீலங்கா மக்கள் பயனடைவார்கள் எனவும், சிறீலங்கா மக்களின் காணிகள் அவர்களுக்கு சொந்தமாக வழங்கப்படும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சிறீலங்காவின் பொருளாதாரமும், பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. சிறீலங்காவுக்கு வழங்கப்படும் நிதி தொடர்பில் பொதுத் தேர்தல் நிறைவடைந்த பின்னரே முடிவெடுக்கப்படும் என அனைத்துலக நாணய நிதியத்தின் தொடர்பாளர் ஜெரி ரைஸ் தெரிவித்துள்ளார். அவர்கள் தமது நிதி வழங்கல் தொடர்பில் புதிய நிபந்தனைகளை விதிப்பதற்கே காத்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, தாம் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளதாக சிறீலங்காவின் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். 2015ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன்களின் விதிவிலக்கு காலம் 2025ஆம் ஆண்டு நிறைவடைவதால் சிறீலங்கா மிகப் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு 2 றில்லியன் ரூபாய்களாக இருந்த கடன் தொகை 2005 -2010களில் ஏற்பட்ட போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் அது 7 றில்லியனாக உயர்ந்துள்ளது. அதாவது மகிந்த அரசு 5 றில்லியன்களை கடனாக பெற்றுள்ளது.

எனினும் அதன் பின்னர் வந்த அரசு எந்த அபிவிருத்தியும் செய்யாத போதும், கடன் சுமை அதிகரித்து 13 றில்லியன்களாக தற்போது உயர்ந்துள்ளது. இந்த நிலையில் கடந்த வருடம் ஏப்பிரலில் இடம் பெற்ற தாக்குதல் சிறீலங்காவின் பொருளதாரத்தை மேலும் சிதைத்துள்ளது, அதாவது இந்த தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார இழப்பு இரண்டு மிலேனியம் சலஞ்ச் உடன்பாட்டு நிதிக்கு இணையானது.

ஒருபுறம் பொருளாதார அழுத்தம், மறுபுறம் மேற்குலகத்தின் அரசியல் அழுத்தம் சிறீலங்கா இதனை எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றது என்பது ஒருபுறம் இருக்க, இந்த நெருக்கடிகளை ஏனைய இனங்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்த என்ன நகர்வுகளை மேற்கொள்ளப் போகின்றன என்பது தான் தற்போது பலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

• • •




# உலக மைய நீரோட்ட ஊடகங்களை புரிதல்

ந. மாலதி

இன்றைய உலகின் இனவழிப்புகளுக்கும், அருவருப்பான ஏற்றத்தாழ்வுகளுக்கும், சூழல் அழிவுக்கும் இந்த அண்மைய *10,000* ஆண்டு மாற்றங்களே அடிப்படை. மனித சமூகங்கள் சிறு குழுக்களாக ஒத்துழைத்து வாழும் ஒரு உலகளாவிய வாழ்க்கை முறை உருவாகினால் தான் இத்தீமைகளிலிருந்து மாற்றங்கள் கிடைக்கும். ஒரு வழியில் பார்த்தால் விடுதலைப்புலிகள் உருவாக்கிய சமூகமும் இத்தகையதாகதான் இருந்தது.

மைய நீரோட்ட ஊடகங்கள் பரப்பும் கருத்துக்களுக்கு மக்கள் ஏன் அடிமையாக இருக்கிறார்கள் என்பதை வேறொரு வழியிலும் புரிந்து கொள்ளலாம். சார்பு கோட்பாடு *(Dependency Theory)* உலக நாடுகளை நான்கு பிரிவுகளாகவும் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மக்களை அதிகார வர்க்கம், உழைக்கும் வர்க்கம் என இரண்டு பிரிவுகளாகவும் பார்க்கிறது. நான்கு பிரிவிலும் உள்ள அதிகார வர்க்கம் மைய நீரோட்ட கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில் ஆச்சரியம் ஏதுமில்லை. மேற்குலக உழைக்கும் மக்களும், புலம் பெயர் ஈழத் தமிழர்கள் உட்பட, மைய நீரோட்ட பொய்களால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

வளரும் நாடுகளில் உள்ள உழைக்கும் மக்கள் தான் உலகத்தில் மிகவும் பெரும்பான்மையானவர்கள். இவர்கள் தான் இக்கருத்துக்களால் அதிக தீமைக்கு உள்ளாகிறார்கள். இந்த மக்களும் மைய நீரோட்ட பொய்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதுதான் மிகவும் ஆச்சரியப் பட வேண்டிய விடயம். ஏற்றுக் கொள்கிறார்கள் என் பதைவிட முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் சரி. இது எப்படி என்று நாம் கேட்கலாம்.

வளரும் நாடுகளில் உள்ள மக்கள் தங்களுக்கு அண்மையில் உள்ள அதிகார வார்க்கத்தின் சுயநலத்தையும் கூட ஓரளவு தெளிவாக புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய உலக ஒழுங்கில் ஒட்டுமொத்த அதிகார வர்க்கங்களின் நலன்கள் சேர்ந்தே பாதுகாக்கப்படுகின்றன என்பதும் மேற்குலக அதிகார வர்க்கம் வளரும் நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிராக இயங்குகின்றன என்பதையும் தான் இந்த உழைக்கும் மக்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை.

சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களும் ஐ.நாவும் கூட அதிகார வர்க்கம் சார்ந்தே இயங்குகின்றன என்பதை இந்த உழைக்கும் மக்கள் புரிந்து கொள்வதில் தான் பிரச்சனைகள் உள்ளன. இந்த சர்வதேச அமைப்புகளின் தலைமைகளும் மேற் கூறிய மைய நீரோட்ட கருத்துக்களை எதிர்ப்பதில்லை என்பதிலிருந்து இவற்றின் போக்கை நாம் ஊகிக்க வேண்டும். ஆனால் இவ்வமைப்புக்கள் உழைக்கும் ஏழை மக்களின் நலன்களுக்காக இயங்குகின்றன என்ற கருத்து உழைக்கும் மக்களின் மனதில் வேரூன்றியுள்ளது என்பதுதான் பிரச்சனை. இவ்வமைப்புக்களும் தங்களுக்கு கிடைக்கும் நிதியின் பலத்தை கொண்டு உழைக்கும் மக்களை ஏமாற்றி வருகின்றன.




அண்மையில் புலம்பெயர் தமிழ் பள்ளி ஒன்றில் ஒரு நிகழ்வுக்காக ஒரு ஈழத்து மீனவர் பாடலை யூரியூப்பில் தேடினார்கள். கிடைத்த வீடியோ பாடல் முல்லைத்தீவில் ஒரு பாடசாலை பிள்ளைகள் பாடியது. இப்பிள்ளைகள் அமர்ந்திருந்த அரங்கின் பின் கட்டியிருந்த பனரில் கொட்டை எழுத்துக்களில் சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தது. ஏராளமான அரச சார்பற்ற நிறுவனங்களும் பனரில் குறிக்கப்பட்டிருந்தன. ஆனால் இந்த பனரில் தமிழ் மொழி மருந்துக்கும் இல்லை. காலம் காலமாக காலனியாளர்கள் காலனி நாட்டினரை அடிமைகளாக கையாண்டதையே இது நினைவுக்கு கொண்டு வருகிறது. அரச சார்பற்ற நிறுவனங்கள் உண்மையில் யாருடைய நலனுக்காக உழைக்கின்றன என்பதை இதிலிருந் தும் தெரிந்து கொள்ளலாம்.

அதிகாரத்தை அண்டி வாழும் மனித இயற்கைக்கும் அப்பால், அறிவியல் வளர்ச்சியிலும் இன்று சமநிலை இல்லாமையும் உழைக்கும் மக்கள் ஏமாற்றப்படுவதற்கு காரணமாக இருக்கிறது. மைய நீரோட்ட ஊடகங்கள் பற்றிய விழிப்புணர்வு உழைக்கும் மக்களுக்கு தேவை. அதற்கான மக்களின் அறிவை வளர்ப்பது மாற்றத்திற்கான முதலாவது படி.

இதை உணர்ந்து உழைக்கும் மக்களின் கல்வியை முன்னெடுத்தவர்களில் லத்தீன் அமெரிக்காவை சேர்ந்த போலோ/பிராரி முதன்மையானவர். மைய நீரோட்ட ஊடகங்களை புரிந்து கொண்டால், உழைக்கும் மக்கள் கைகோர்ப்பதில்தான் மாற்றம் வரும் என்ற முடிவுக்கு உழைக்கும் மக்கள் வருவார்கள். அப்போதும் ஐ-அமெரிக்கா பார்த்துக் கொண்டு இருக்காது. விழிப்புணர்வு உள்ள குழுமங்களை தேடி அழிக்கும். விடுதலைப் புலிகளை அழித்தது போல.

இவ்வாக்கத்தில் பல ஆய்வாளர்களின் கருத்துக்கள் மேலோட்டமாக தொகுத்து வழங்கப்பட்டிருக்கின்றன. அதிகாரம் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய பெட்ரன்ட் ரஸ்சல் *(Betrand Russel)*, *primatogy* ஆய்வாளர்களின் பெண்கள் கூட்டொருமையில் இயங்கும் பொனொபோக்கள், *David Sloan Wilson* ஆய்வாளரின் சிறிய மானிட சமூகங்களும் ஒத்துழைப்பும், லத்தீன் அமெரிக்காவில் தோன்றிய சார்புக் கோட்பாடு, வில்லியம் பிளமின் ஐ-அமெரிக்கவின் "நம்பிக்கை கொலை" பற்றியவையே இவை. இவற்றையும் விட நவ தாராளவாதம் பற்றிய அறிவும் முக்கியமானது. அதுபற்றியும் நோம் சொம்ஸ்கி உட்பட பலரின் கருத்துக்கள் இப்பத்தியில் முன்னர் எழுதப்பட்டுள்ளன.

• • •

# சிறீலங்காவை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை முன் நிறுத்தும் பொறுப்பு புலம்பெயர் தமிழர்களுடையது

சூ.யோ.பற்றிமாகரன்




ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வில் 2015இல் 47 நாடுகளால் கொண்டு வரப்பட்டு சிறீலங்காவும் தான் அதனை அனுசரிப்பதாகக் கையெழுத்திட்ட மனித உரிமைகள் சபையின் 30/1ம் இலக்கத் தீர்மானமான சிறீலங்காவில் புனர்வாழ்வு, பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் என்பனவற்றை முன்னேற்றுதல் தொடர்பான தீர்மானத்தில் இருந்து விலகிக் கொண்ட சிறீலங்கா, தனது நாட்டின் இறையாண்மைக்கும், அரசியலமைக்கும் இத்தீர்மானத்திற்கு அனுசரணையாக இருத்தல் எதிரானது எனத் தனது செயலுக்கு நியாயமும் கற்பித்துள்ளது.

இதன் மூலம் சிங்கள பௌத்த நாடாக சிறீலங்கா தன்னை அறிவித்து, அந்நாட்டின் மற்றொரு இறைமையாளர்களான ஈழத் தமிழர்களுக்கான நல்லாட்சி, சனநாயகம், மனித உரிமைகளை வன்முறைப்படுத்தி அவர்களுக்கான சட்ட ஆட்சியையும் நீதிச் சமத்துவத்தையும் ஆக்கிரமித்து அடக்குமுறை செய்துள்ளது. இதனை உலக அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையிலேயே செய்வதற்கு சட்ட ரீதியாக அதற்கு அதிகாரமளிக்கும் ஆவணமாக சிறீலங்காவின் அரசியலமைப்பையே அது உலகிற்குக் காட்டியுள்ளது.

சிறீலங்காவின் இச்செயற்பாடு ஈழத் தமிழர்களின் உரிமைகளை அழிக்காது தடுப்பதற்கு இரண்டு விடயங்களை உலகு நடைமுறைப்படுத்த புலம்பெயர் தமிழர்களும் உலகத் தமிழர்களும் உடனடியாக அனைத்துலக நாடுகளுக்கும், அனைத்துலக அமைப்புக்களுக்கும், அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்னும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

ஒன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம், தான் நிறைவேற்றிய தீர்மானத்தை ஒரு நாடு ஏற்கா விட்டால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மூலம் அதனை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வாக்கெடுப்புக்குக் கொண்டுசென்றுசாதாரணமேலதிகவாக்குமூலம் அதனை நிறைவேற்ற அதற்கு உரிமையுண்டு. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம், சிறீலங்காவில் மனித உரிமைகளைப் பாதுகாக்கத்தான் எடுத்த முயற்சிகளை சிறீலங்கா பகிரங்கமாகவே மீறியுள்ளதால், சிறீலங்காவில் மனித உரிமைகளை பாதுகாக்கக் கூடிய அனைத்துலகப் பொறிமுறை ஒன்றை காலந் தாழ்த்தாது உருவாக்கி அதனை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை முன் வாக்கெடுப்புக்குக் கொண்டு சென்று நிறைவேற்ற முயற்சிக்க, புலம்பெயர் தமிழர்களும் உலகத் தமிழர்களும் உடனடியாக உழைக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் ஆணையகம் கொண்டு வந்து சாதாரண மேலதிக வாக்கு மூலம் நிறைவேற்றும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தமது தடுப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுக்கும் உரிமை, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளுக்கும் இல்லை என்பதால் இதுவே ஈழத்தமிழர்களின் உரிமைகளைவெளிநாடுகளின்தலையீடுகளின்றி பாதுகாப்பதற்கு ஏற்புடைய நடைமுறை காணப்படுகிறது.

இரண்டாவது சிறீலங்கா தான் தீர்மானத்தில் இருந்து வெளியேறுவதற்குக் காட்டிய முக்கிய நியாயப்பாடுகளான அதன் இறைமை, அதன் அரசியலமைப்பு இரண்டையும் சிறீலங்கா சிங்கள பௌத்தர்களுடையது என்று கருதிச் செயற்படுவதே இலங்கைத் தமிழர் பிரச்சினையாக உள்ளது. இலங்கைத் தமிழர்கள், பிரித்தானியக் காலனித்துவ அரசு 1833இல் கோல்புறூக் அரசியல் அமைப்பை இலங்கையில் அறிமுகப்படுத்தி பல அரசுகள் உடன் திகழ்ந்த இலங்கைத் தீவை ஒற்றையாட்சிக்குள் கொண்டு வரும் வரை இலங்கையில் தங்களுக்கான தனியான இறைமையுடனும், சிங்கள ஆட்சிக்குட்படாத அவர்களது ஆட்சியுடைய அரசுடனும் தமிழர்கள் வாழ்ந்தமையால், அவர்களுக்கும் இலங்கையின் இறைமையில் உரிமையுண்டு, இலங்கைத் தமிழர்களாலும் அரசியலமைப்புச் சட்டம் ஏற்கப்பட வேண்டும். இந்த அடிப்படை வரலாற்று உண்மைகள் குறித்த எண்ணம் எள்ளவுமில்லாத சிறீலங்கா ஆட்சியாளர்கள் படைபலம் கொண்டு தமிழர்களின் அரசியல் பணிவைப் பெற்று இலங்கைத் தமிழர்களின் இறைமையையும் அரசியலுரிமைகளையும் வன்முறைப்படுத்துவதே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை என்பதை உலகுக்குப் புலம்பெயர் தமிழர்களும் உலகத் தமிழர்களும் தெளிவாக எடுத்துரைத்தாலே ஈழத்தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.



1948ஆம் ஆண்டு பிரித்தானியா தான் இலங்கைக்குச் சுதந்திரம் கொடுக்கும் பொழுது சிறுபான்மையினத்துக்கோ மதத்திற்கோ எதிரான சட்டங்கள் இலங்கைப் பாராளமன்றத்தில் கொண்டு வரப்பட்டால் அது குறித்து பிரித்தானியப் பிரிவுக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யலாம் என்னும் 29/2 பிரிவை உள்ளடக்கிய சோல்பரி அரசியலமைப்பை வழங்கி, மாட்சிமை தங்கிய மகாராணியின் பிரித்தானிய அரசிடம் தமிழர்களின் இறைமையைச் சிறுபான்மையினர் உரிமை என்ற பின்னணியில் ஒப்படைத்தது. இப்பிரிவு சிறுபான்மையினரின் பாதுகாப்புக் குறித்த அச்சங்களுக்கு விடையாக அமையுமென்றது. இதனால் இலங்கையின் இறைமை இலங்கைப் பாராளமன்றத்திடமும் பிரித்தானிய அரசிடமும் சுதந்திரத்தின் பின்னரும் தொடர்ந்தது.



ரஷ்யா இலங்கையை ஐக்கிய நாடுகள் சபையின் தனியுறுப்பு நாடாகச் சேர்க்கக் கூடாது என 1956 வரை இருமுறை தனது பாதுகாப்புச்சபைத் தடுப்புரிமையைப் பயன்படுத்தியமை இந்த இறைமைப் பகிர்வை உலகிற்கு உறுதி செய்தது. தமிழர்களுடைய இறைமையைச் சிங்களவர்களது இறைமையுடன் பகிரச் செய்த இந்த சோல்பரி அரசியலமைப்பில் இருந்து தமிழர்களின் குடியொப்ப விருப்புப் பெறப்படாத சிங்கள பௌத்த சிறீலங்காக் குடியரசு நிறைவேற்றப்பட்ட 22.05. 1972 முதல் இன்று வரை இலங்கைத் தமிழர்களை ஆளும் உரிமை சிறீலங்காவுக்கு இல்லை என்பதால் அரசற்ற நாட்டினத்தவராகவே இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனால்தான் அவர்களுடைய அரசியல் உரிமைகள் அவர்களுக்கு மீள்வதற்கு இடையில் எவ்வளவு வேகமாக அவர்களை இனஅழிப்புச் செய்ய முடியுமோ அவ்வளவு வேகமாக சிங்கள பௌத்த பேரினவாதம் பேசும் பௌத்த பீடாதிபதிகளின் விருப்பையே தனது அரசியல் கொள்கையாகக் கொண்டு செயற்படும் சிங்களப் பெரும்பான்மைச் சிறீலங்கா அரசு செய்து வருகிறது என்பதைப் புலம்பெயர் தமிழர்களும் உலகத் தமிழர்களும் உலகுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இந்த இரண்டு விடயங்களும் ஏககாலத்தில்நடைமுறைப்படுத்தப்பட்டாலேஈழத்தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டு, அவர்களது மனித உரிமைகளை, சிறீலங்கா தொடர்ச்சியாக வன்முறைப்படுத்தி, அதன் அடிப்படையில் ஈழத்தமிழினத்தை உலக நாடுகளுக்கோ உலக அமைப்புகளுக்கோ அனைத்துலகச் சட்ட முறைமைகளுக்கோ, எவ்வித அச்சமுமின்றி, பகிரங்கமாகவே இனஅழிப்புக்கும் கலாச்சார இனஅழிப்புக்கும் உள்ளாக்கி, பிரித்தானிய காலனித்துவத்தால் தனக்குக் கிடைத்த சிங்களப் பெரும்பான்மைப் பாராளமன்ற ஒற்றையாட்சி மூலம் தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து, தேசியத்தை சீரழித்து தன்னாட்சி உரிமையை மறுத்து, சிங்கள பௌத்த பேரினவாதத்தையே ஈழத்தமிழர்கள் மேலான அரசியலாக வெளிப்படுத்தும் நிலையைத் தடுத்து நிறுத்த முடியும்.

• • •



# உலங்கு வானூர்தியால் உயர்ந்த இந்திய-அமெரிக்க படைத்துறை ஒத்துழைப்பு

**வேல் தர்மா**

கடந்த இருபது ஆண்டுகளாக சீனாவின் எழுச்சியைக் கருத்தில் கொண்டு இந்தியாவும் அமெரிக்காவும் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றன. இதில் அமெரிக்காவின் குடியரசுக் கட்சியும் மக்களாட்சிக் கட்சியும் ஒரே கருத்துடன் இருக்கின்றன. பனிப்போர்க் காலத்திலும் அதற்குப் பிந்திய காலத்திலும் இந்தியாவிற்கு புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய படைக்கலன்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா தயக்கம் காட்டி வந்தது. 2018ஆம் ஆண்டில் தான் அமெரிக்கா தனது தயக்கத்தைக் கைவிட்டது. 2008ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான படைத்துறை வர்த்தகம் ஏதும் இல்லை என்று சொல்லுமளவிற்கு குறைந்த அளவாக இருந்தது. அதைத் தொடர்ந்து வந்த பத்து ஆண்டுகளில் இந்தியா அமெரிக்காவிடமிருந்து 15 பில்லியன் டொலர்கள் பெறுமதியான படைக் கலன்களை வாங்கும் அளவிற்கு அதிகரித்தது.

### படைக் கலன்களோடு தொழில் நுட்பமும் வேண்டும்

இந்தியா வெளிநாடுகளில் இருந்து படைக் கலன்களை வாங்கும் போது அப்படைக் கலன்களில் உள்ள தொழில் நுட்பத்தை இந்தியா பாவித்து அதே போன்ற படைக் கலன்களை இந்தியாவில் உற்பத்தி செய்யும் உரிமத்தையும் வாங்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. இந்தக் கொள்கைக்கு ரஷ்யா மட்டுமே உடன்பட்டிருந்தது. சீனாவின் எதிரி நாடுகளுடன் இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என்பதன் அவசியத்தை இந்தியா அமெரிக்காவுடன் The Logistics Exchange Memorandum Agreement ( LEMOA) என்னும் உடன்படிக்கை செய்து கொண்டமை சுட்டிக் காட்டியது. அமெரிக்காவும் இந்தியாவும் படைத்துறை வழங்கல் வசதிகளை பரிமாறிக் கொள்ளும் இந்த உடன்படிக்கை 2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கைச்சாத்திடப்பட்டது. பத்து ஆண்டுகளாக இழுபறிப்பட்ட இந்த உடன்படிக்கை இந்தியாவில் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கைச்சாத்திடப்பட்டது. 2017ஆம் ஆண்டு அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல்களில் இருந்து விமானங்களை மின்காந்தம் மூலம் எழும்பவும் தரையிறங்கவும் செய்யும் தொழில் நுட்பத்தை இந்தியாவிற்கு வழங்கியது. அமெரிக்காவின் F-16 மற்றும் F-18 ஆகிய போர் விமானங்களின் தொழில் நுட்பங்களின் பாவனை தொடர்பாக அமெரிக்கா விடுத்த கட்டுப்பாடுகளால் இந்தியா அவற்றை வாங்காமல் பிரான்சிடமிருந்து ரஃபேல் விமானங்களை வாங்கியது.

### 2018 புதுடில்லிச் சந்திப்பு

2018ஆம் ஆண்டு அமெரிக்க - இந்தியப் படைத்துறை ஒத்துழைப்பில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அப்போதும் இந்தியாவும் அமெரிக்காவும் பல உலக விவகாரங்களில் முரண்பட்டிருந்தன. இந்தியா ஈரானில் இருந்து வாங்கும் எரிபொருட்களைக் குறைக்க வேண்டும், இந்தியா ரஷ்யாவிடமிருந்து எஸ்-400 ஏவுகணை எதிர்ப்பு முறைமைகளை வாங்கக் கூடாது, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இந்தியா இணைந்து குவாட் என்னும் நான்கு நாடுகளின் படைத்துறை கூட்டமைப்பில் தீவிர ஈடுபாடு காட்ட வேண்டும், கடற் பாதுகாப்பில் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க வேண்டும், அமெரிக்காவுடன் செய்யும் படைத்துறைப் பயிற்சிகளையும் ஒத்திகைகளையும் அதிகரிக்க வேண்டும் எனப் பல நிபந்தனைகளை இந்தியாவிற்கு அமெரிக்கா விதித்திருந்தது.

2018ஆம் ஆண்டு இரு நாடுகளின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் புதுடில்லியில் சந்தித்து பல படைத்துறை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டனர். இரு நாடுகளினதும் படைத்துறை தகவல்களைத் தடையின்றி பரிமாறும் The Communications Compatibility and Security Agreement (Comcasa) என்ற ஒப்பந்தமும் அதில் அடங்கும். தனது படைத்துறைத் தேவைகளுக்கு ரஷ்யாவில் அதிகம் தங்கியிருக்கும் நாடு என்ற நிலையில் இருந்து இந்தியாவை இந்த ஒப்பந்தங்கள் விலகச் செய்தன.

இந்தியா வாங்கும் உலகின் முதற்தர உலங்கு வானூர்திகள்

**3.5பில்லியன் உலங்கு வானூர்த்தி ஒப்பந்தம்:**

**1. இந்தியக் கடற்படைக்கு 24 Sikorsky MH-60R Sea Hawk பற்பணி உலங்கு வானூர்திகள்.**



இவற்றில் இருபத்தி இரண்டு உலங்கு வானூர்திகள், இந்தியா 2022இல் சேவைக்கு விடும் விக்ராந்த் என்னும் விமானம் தாங்கிக் கப்பலில் உள்ளடக்கப்படும். இரண்டு சிவாலிக், நில்கிரி ஆகிய புலப்படா பீரங்கிக் கப்பல்களிலும் டெல்லி வகை, கொல்கத்தா வகை, விசாகப்பட்டினம் வகை நாசகாரிக் கப்பல்களிலும் சுழற்சி முறையில் உள்ளடக்கப்படும். இந்தியா தனது நாசகாரிக் கப்பல்களுக்கு தலைநகர் டில்லியினதும் மாநிலத் தலைநகர்களினதும் பெயர்களைச் சூட்டியுள்ளது.

**2. இந்தியத் தரைப் படைக்கு ஆறு Boeing AH-64E Apache Guardian தக்குதல் உலங்கு வானூர்திகள்.**

இந்த உலங்கு வானூர்திக் கொள்வனவை 2018 ஒகஸ்ட்டில் இந்திய அரசும் 2019 ஏப்ரலில் அமெரிக்க அரசும் அங்கீகரித்திருந்தன. இந்தியா அமெரிக்காவிடமிருந்து வாங்கும் உலங்கு வானூர்திகள் தற்போது உலக அரங்கில் உள்ள உலங்கு வானூர்திகளில் முதன்மையானது எனக் கருதப்படுகின்றது. அவற்றின் சிறப்புக்கள்:

**1.நீர்மூழ்கிகளை அழிக்கக் கூடியவை.**

இந்தியாவிலும் பார்க்க இரண்டு மடங்கு எண்ணிக்கையிலான நீர்மூழ்கிகள் சீனாவிடமிருக்கின்றன.

**2. நீர் மேற்பரப்பில் உள்ள கடற் கலன்களையும் அழிக்கக் கூடியவை.**

**3. சிறப்பாக வேவு பார்க்கக் கூடியவை.**

**4. லேசர் வழிகாட்டலுடன் எதிரியில் தரை, கடல் மற்றும் வான் இலக்குக்களைத் தாக்கக் கூடிய ஹெல்ஃபயர் ஏவுகணைகளை இவற்றில் இருந்து வீசலாம்.**

**5. ஆறாயிரம் இறாத்தல் எடையுள்ள பொருட்களை தூக்கிச் செல்லக் கூடியவை.**

**6. இலத்திரனியல் போர் செய்யக் கூடியவை.**

**7. படைத்துறைத் தொடர்பாடல்களை அஞ்சல் செய்யக் கூடியவை.**

### சீனாவிற்கு சவாலாகும் இந்தியக் கடற்படை

இந்தியா அமெரிக்காவிடமிருந்து வாங்கும் MH-60R உலங்கு வானூர்திகளின் படைத்துறைத் தகவல்களை அஞ்சல் செய்யும் திறன் அமெரிக்காவிற்கும் நன்மையளிக்கக் கூடியவை. இரு நாடுகளும் குறியீட்டாக்கிய படைத்துறைத் தகவல்களை தடையின்றியும் தானியங்கியாகவும் பரிமாறும் The Communications Compatibility and Security Agreement (Comcasa) என்ற ஒப்பந்தம் சரியா கச் செயற்பட இந்த வானூர்திகள் பெரிதும் பயன்படுத்தப்படும். இந்துமா கடற்பரப்பில் வல்லரசு நாடுகளிடையே உள்ள போட்டியில் யார் வலியவர் என்பதை, இந்தியா யார் பக்கம் நிற்கும் என்பதே தீர்மானிக்கும். அதற்கு இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் உள்ள LEMOA மற்றும் Comcasa ஒப்பந்தங்கள் அமெரிக்காவிற்கு உதவியாயிருக்கும். இந்துமா கடலிலும் பசுபிக் பெருங் கடலிலும் உள்ள அமெரிக்கப் படைத்தளங் களை இந்தியாவும் தன் படைத்துறை வழங்கல்களுக்கு பயன்படுத்தும் உரிமம் சீனாவின் கடற்படைக்கு பெரும் சவாலாக அமையும்.

### பங்காளிகள் மட்டுமே

அமெரிக்காவையும் இந்தியாவையும் முழுமையான நட்புறவு பேணும் நாடுகள் எனச் சொல்ல முடியாது. இரண்டுக்கும் இடையில் உருவாகிக் கொண்டிருப்பது சீனாவிற்கு எதிரான கேந்திரோபாயப் பங்காண்மை மட்டுமே. அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவின் படைத்துறையும் பொருளாதாரமும் அமெரிக்காவிற்கு சவாலாக உயர்வடைந்தால், இந்தியாவிற்கு எதிரான கேந்திரோபாயப் பங்காளி ஒன்று அமெரிக்காவிற்கு தேவைப்படலாம். அமெரிக்கா தனது போர் விமானங்களின் புலப்படாத் தொழில் நுட்பத்தை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள இன்னும் தயாராக இல்லை.

• • •

## நுண்நிதிக் கடனால் ... தொடர்ச்சி..

கொண்டிருக்காத நிதி நிறுவனம் ஒன்று கிளிநொச்சியில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் மக்களிடத்தே அதிகூடிய வட்டி வீதங்களில் கடன்களை வழங்கி விட்டு அவற்றை அறவிட்டு வருவதுடன் உரிய காலத்தில் கடன்களை செலுத்தத் தவறின் பயனாளிகளிடம் அதற்குப் பதிலாக மிகவும் பெறுமதி வாய்ந்த வீட்டுப்பாவனைப் பொருட்களை குறைந்த தொகைக்காக பறித்துச் சென்றுள்ளது எனவும் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பத்தில் உள்ள ஒருவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருவதுடன் அந்த குடும்பத்திற்கான மாத வருமானம் 18000 ரூபாவிற்கும் குறைவான தொகையாக உள்ள நிலையில் குறித்த குடும்பம் இவ்வாறான நிதி நிறுவனங்களிடமிருந்து நான்கிற்கும் மேற்பட்ட கடன்களைப் பெற்று மாதம் ஒன்றுக்கு சுமார் எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொகையை வட்டியும் முதலுமாக செலுத்த வேண்டிய நிலையில் 54000 ரூபாவிற்கு வாங்கிய தொலைக் காட்சிப் பெட்டியை குறித்த நிறுவனங்களில் ஒன்றுக்கு 20000 ரூபாவிற்கு கட்டாயத்தின் பெயரில் கொடுத்துள்ளார்.

இதனைவிட அடுத்த கடனைச் செலுத்த முடியாமல் உள்ள நிலையில் குளிர்சாதனப் பெட்டியைதருமாறு நிதி நிறுவனத்தினர் வற்புறுத்துகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.கடன் அறிவிடுபவர்கள் கடனைக்கட்டுமாறு வீட்டில் வந்து நிற்பதுடன் இரவு 10.00 மணி என்றாலும் அவர்கள் போக மாட்டார்கள். அதனால் மேற்படி தொலைக்காட்சிப் பெட்டியை கொடுத்தேன் இவர்கள் இரவு வேளைகளில் வீடுகளில் இருப்பதனால் நாங்கள் இருவரும் பெண்கள் என்பதால் பல்வேறு சமுக பிரச்சனைகளை எதிர்கொள்கின்றோம்.

இனி தற்கொலை தான் செய்து கொள்ள வேண்டும் எனவும் அந்த பெண் தெரிவித்துள்ளார். இதேபோன்று நுண்கடன் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்ற இளம் குடும்பப் பெண்ணொருவர் அதனை செலுத்த தவறிய நிலையில் கடன் அறிவிடுபவர்கள் தினமும் வருவதனாலும் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் காலநேரமின்றி இவர்கள் வருவதனால் எங்களது குடும்பத்தில் ஓரே பிரச்சனை அத்துடன் எனது கணவனின் உறவினர்கள் மத்தியில் நான் தவறாகப் பார்க்கப்படும் நிலை கூடகாணப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின் தங்கிய கிராமங்களில் இது போன்ற சம்பவங்கள் அதிகளவிலே இடம் பெற்று வருகின்றன. ஆண்மையில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கடன் பெற்ற பயனாளி ஒருவரின் வீட்டிற்கு சென்று இரவு வேளை கடன் செலுத்துமாறு வற்புறுத்திய நிலையில் பிரதேச செயலாளர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, இரவு வேளை குறித்த இடத்திற்கு சென்ற பிரதேச செயலாளரால் நிதி நிறுவனப் பணியாளர் எச்சரிக்கை செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நிதி நிறுவனங்கள் கடன்களை அறவிடுவதற்கு பிற்பகல் 5. 00 மணிக்கு பின்னர் அதன் பயனாளிகளின் வீடுகளுக்கு செல்லக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ள போதும் பின் தங்கிய பகுதிகளில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை கடன்களை பெறும் பயனாளிகள் அதனை செலுத்த தவறிய நிலையில் பகல் வேளைகளில் வீடுகளைப் பூட்டிவிட்டு வேறு இடங்களுக்கு சென்று விட்டு இரவு வேளைகளில் வருவதும் ஒரு காரணமாகவுள்ளது.

இவ்வாறான கடன் அறவீடுகள் தொடர்பாகவும் இதனால் ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் மாவட்ட அரச அதிபர் மற்றும் மேலதிக அரச அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் கடந்த வாரம் நடைபெற்ற பால் நிலை மற்றும் பால் நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிற்பகல் 5.00 மணிக்குப் பின்னர் எவரும் அதன் பயனாளிகளின் வீடுகளுக்கு செல்லக்கூடாது என்றும் இவ்வாறு செல்வதனால் மாவட்டத்தில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன என்றும் அவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட அரச அதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நுண்கடன் நிதி நிறுவனங்கள் மற்றும் அதிகூடிய வட்டி வீதங்களைக் கொண்டவர்களிடமிருந்து வட்டிக்கு பணம் பெற்றுக் கொள்பவர்கள் பல்வேறு தேவைகளுக்காக கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். குறிப்பாக வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்தல் மற்றும் வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறுபட்ட தேவைகளுக்காக இவ்வாறு முறைகளற்ற விதத்தில் அதிகூடிய வட்டிக்கு கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆனால்வங்கிகளில்இதற்கானதிட்டங்கள் உள்ளன. அவற்றை பெற்றுக் கொள்வதற்குரிய தகமை அல்லது ஏற்கனவே பெற்ற கடன்களை செலுத்தப்படாமை என்பவற்றால் வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொள் முடியாத நிலையில் உள்ளவர்களே இவ்வாறு நுண்கடன்களை பெற்றுக்கொண்டு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இதனைவிட வாழ்க்கைச் செலவு ஒரு புறம். மற்றவர்களை போன்று ஆடம்பரமாக வாழவேண்டும் என்றும் கடன்களைப் பெற்று கடனாளிகளாக மாறி அவற்றை செலுத்த முடியாமல் உள்ளவர்கள் ஒரு புறம். இவ்வாறு பல்வேறுபட்ட கடன் சுமைகளால் தொழில் வாய்ப்புக்கள் இன்றி ஏராளமான குடும்பங்களில் குடும்ப வன்முறைகள், குடும்பப் பிணக்குகள், குடும்பப் பிரிவுகள் தற்கொலைகள் என நீண்டு செல்கின்றன. இவற்றை தடுக்க வேண்டிய பொறுப்பும் கடமைகளும் எல்லோரிடத்திலும் தங்கியுள்ளது.

• • •

## புலம்பெயர்... தொடர்ச்சி...

**உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

**பதில்:**

தாயகத்தில் இருப்பவர்களைவிட புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களே இந்தக் கலைகளை பெரிதும் மதிக்கின்றனர். இழந்தவனுக்குத் தான் அதன் வலிகள் தெரியும். சொந்த நாட்டிலிருந்து உயிரையும் உணர்வுகளையும் கொண்டு போன அந்த சமூகம் தன்னை அடையாளப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. தங்கள் அடையாளங்களை பலப்படுத்த கலைகள் தேவை என்ற ஒரு சரியான முடிவில் அவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் தாயகத்தில் இது ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கின்றது.

**புலம்பெயர் சமூகத்தினர் செய்ய வேண்டிய விடயங்கள் என்று பார்த்தால்,**

1. இங்கு கலைகளை மேற்கொண்டு வரும் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு அடிப்படை பொருளாதாரம் தான். பொருளாதார ரீதியில் அவர்களுக்கு உதவினால், அவர்கள் மனமகிழ்வுடன் தங்கள் கலைகளை மேற்கொள்ள முடியும்.

2. இங்குள்ள கலைஞர்களை தாங்கள் இருக்கும் இடங்களுக்கு வரவழைத்து கலைகளை காண்பிக்கும் போதும் கலைஞர்களுக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கின்றது.

அவர்களுக்குரிய அங்கீகாரமும், பொருளாதாரமும் இருக்கும் பட்சத்தில் அவர்கள் அந்தக் கலைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்கள் தான் சில விடயங்களை சாத்தியமாக்கக்கூடியதாக இருக்கும்.

**கேள்வி:**

**உங்களுடைய கலைஞர்களின் எதிர்கால செயற்பாடுகள் எப்படியிருக்கும்?**

**பதில்:**

எங்கள் குழுவில் இருக்கும் ஒருசிலர் தான் வேலைக்கு செல்பவர்கள். ஏனையோர் வேலைக்கு செல்லாதவர்கள். நாடகக் கலையை ஒரு தொழில் முறை குழுவாக உருவாக்குவதன் மூலம் அவர்களுக்கு ஒரு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதும் அதன் மூலம் எங்களால் முடிந்த வரையில் கலையை வளர்த்துக் கொண்டு போவதிலும் தான் எங்கள் பயணம் அமைகின்றது. இவை தொடர்பாக சில இடங்களில் எவ்வாறு கொண்டு செல்வது என்று பேசியிருக்கின்றோம். அந்த விடயங்கள் தொடர்பாக சாத்தியமாகும் இடத்து நாங்கள் முழுநேர கலைஞர்களாக இயங்கலாம்.

**கேள்வி**

**இலங்கை அரசாங்கத்தினால் தமிழர்களின் கலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப் படுகின்றதா?**

**பதில்:**

சில இடங்களில் வழங்கப்படுகின்றது. கலாசார திணைக்களம் பாரம்பரிய கலைகளை மேற்கொள்ளும் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக கலைஞர்களுக்கு கலாபூசணம் விருது வழங்குகின்றார்கள். அது ஒரு வகையான அங்கீகாரம். மற்றும் கலாசார திணைக்களம் பாரம்பரிய கலைகளை ஆவணப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இவை சில இடங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

கொழும்பிலுள்ள கலைஞர்களுக்கான சாத்தியப்பாடுகள் நிறைய உள்ளன. அவர்கள் வெளிநாடுகளுக்கு போகக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் எங்களுக்கு அங்கிருந்து சில தகவல்கள் பரிமாறப்படுவதில்லை. கொழும்பிலுள்ள கலைஞர்களுக்கும் இங்கு இருக்கும் கலைஞர்களுக்கும் இடையில் ஒரு தொடர்பு இருக்கும் போது தான் ஒரு தகவல் பரிமாற்றம் இருக்கும். எங்களுக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்காமையால், நாங்கள் வெளியில் தெரியவில்லை. கொழும்பிலுள்ள ஒரு நாடகக் கலைஞருக்கு திரைப்பட வாய்ப்புகள், மேடை நாடக வாய்ப்புகள் கிடைக்கும். சிறந்த கலைஞர்களை வெளிநாடுகளில் கலை நிகழ்வுகளை மேற்கொள்ள வைக்கின்றனர். பயிற்சிப்பட்டறை, வகுப்புகள் மேலதிகமாக வழங்கப்படுகின்றது. அதனால் அவர்கள் சிறந்து விளங்குகின்றார்கள்.

எங்களுக்கும் சரியான தொடர்புகள் கிடைக்குமிடத்து எமது கலைஞர்களையும் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லலாம்.

• • •



# வனவளமே எம்மின வளம்

## “ உலக வனவள தினம் 3 மார்ச் 2020 ”

**ஐக்கிய** நாடுகள் அவையின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் 2014ஆம் ஆண்டு முதல் மார்ச் 3ஆம் திகதியை உலக வனவள தினமாக பிரகடனப்படுத்தி, வனவளங்கள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும் வனவளங்களின் அழிவு மனித குலத்தை எவ்வகையில் பாதிக்கும் என்பதையும் அதனை தடுத்து, நிரந்தர அபிவிருத்தியை எவ்வாறு நிலை நிறுத்தலாம் என்றும் அறிவுறுத்தி வருகிறது. இவ்வகையில் 2020ஆம் ஆண்டு “உலகில் அனைத்து உயிரினங்களதும் வாழ்வை நிலை நிறுத்தல்” எனும் தொனிப் பொருளில் வினவிலங்குகளும், தாவரங்களும் உயிரியல் விரிவாக்கத்திற்கும் நிலைத் தன்மைக்கும் மூலாதாரம் என்பதை வலியுறுத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இச் செயற்பாடுகள் வறுமை ஒழிப்பு, நிலையான மூலவள பாதுகாப்பு, நிலத்திலும், நீரிலுமான உயிர்வள பராமரிப்பு, மற்றும் உயிரின விரிவாக்க மேம்பாடு என்பவற்றை பிரதான செயற்றிட்ட இலக்குகளாக கொண்டு முன்னெடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் மேம்பாட்டு அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.




### உலகளாவிய இயற்கை தொடர்பான விழிப்புணர்வு

அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் காட்டுத்தீ, வெள்ளம், பனிப்புயல், நில அதிர்வு போன்ற இயற்கை அனர்த்தங்களும் புதிய வகை நோய் தொற்றுகளும் இயற்கையின் சீற்றத்தை கட்டியம் கூறி நிற்கின்றன. காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனம் 1992ஆம் ஆண்டு முதல் இயற்கை வளம் பேணல் தொடர்பான பல்வேறு திட்டங்களை முன் வைத்து செயற்பட்டு வருகின்ற போதும், தொழில்நுட்ப புரட்சியின் பேரில் அளிக்கப்பட்ட இயற்கை வளங்களை மீள கட்டியெழுப்புவதில் நவீன உலகம் பின்தங்கியே உள்ளது. இதற்கு முதலாளித்துவ நாடுகளின் விட்டுக்கொடுப்பில்லாத பொருண்மிய போட்டியும், அசண்டையீனமும் பிரதான காரணமாக அமைவதாக கூறப்பட்டாலும், இயற்கையை பேணும் பொறுப்பு ஒவ்வொரு தனி மனிதனின் கைகளிலும் உள்ளது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. எமது சந்ததியின் பொறுப்புணர்வின்மை இளைய சமுதாயத்தை விழிப்படைய செய்துள்ளதுடன், அவர்கள் தமது எதிர் காலத்துக்காக வீதிகளில் இறங்கி போராடும் புறச்சூழலை நாமும் எம் அரசுகளும் ஏற்படுத்தியுள்ளோம் என்பதே இன்றைய யதார்த்தம்.

அண்மைக் காலங்களில் பிரபலமாகி வரும் கிரேட்டா தன்பேர்க் எனும் 17 வயது சிறுமி கிளர்ந்தெழுந்து வரும் இளைய சமுதாயத்தின் குறியீடாக திகழ்கிறார். அண்மையில் அவர் குறிப்பிட்டது போல் “நாங்கள் இப்போது உரிய வகையில் செயற்படவில்லையானால், பின்பொரு நாளில் நீங்கள் என்ன செய்தீர்கள் எனும் கேள்விக்கு பதிலளிக்க முடியாதவர்களாவீர்கள்”. இன்றைய சுற்றுச் சூழல் அனர்த்தங்கள் அரசியல்வாதிகளாலும், ஊடகங்களாலும் முற்றாக நிராகரிக்கப்பட்டு வருவதனால், எம் முனவர்களுக்காக சிறுவர்களாகிய நாம் தீவிரமாக செயற்பட நேரிட்டுள்ளது என கூறும் அவர், தவிர்க்க முடியாமல் நாம் எம் இளவயது இன்ப வாழ்வை துறந்து வீதிகளில் இறங்கி துப்பரவு செய்யவும் போராடவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என மனவேதனை யோடு இளையோரே இயற்கையை பாதுகாக்க வாரீர் என அறைகூவல் விடுக்கிறார்.

### இயற்கையும் தமிழர் வாழ்வியலும்

இயற்கையோடு இணைந்த வாழ்வை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து மனித குலம் இனங்கண்டு கடைப்பிடித்து வந்திருக்கிறது. இவ்வகையில் தமிழினத்துக்கு என்று ஓர் தனித்துவம் உள்ளதை வரலாறு சான்று பகர்ந்து நிற்கிறது. சங்ககால இலக்கியங்களிலும், திருக்குறள் முதலான நூல்களிலும் பல்வேறு இடங்களில் இயற்கையோடு இணைந்த வாழ்வை புலவர்கள் பதிவு செய்து சென்றிருப்பது இதற்கான ஆதாரமாக கொள்ளலாம். புறநானூற்றில் வரும் பாடல்கள் பல இயற்கையை பேணுதலின் முக்கியத்துவத்தை சுட்டிச் காட்டுவதாக அமைகின்றன. அவ்வகையில் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் எனும் புலவர் போரில் வென்ற பாண்டிய மன்னனை பார்த்து “கடிமரந் தடிதலோம்புநின் நெடுதல் யானைக்குக் கந்தாற்றாவே” என்று பாடியதாக ஓர் பாடல் வரியுண்டு. இங்கு அப்புலவர் நின் வீரர் பகைவர் நாட்டு வயல்களைக் கொள்ளை கொள்ளின் கொள்க! ஊர்களைத் தீக்கிரை யாக்கினும் ஆக்குக!

நின் வேல் அப் பகைவரை அழிப்பினும் அழிக்க! அவர் கடிமரங்களை (காவல் மரங்களை) மட்டும் தடியாமல் விடுக! அவை நின் யானை கட்குக் கட்டுத் தறியாகும் வன்மையுடையவல்ல” என்று பாடுகின்றார். இங்கு மனிதரை மற்றும் அவர் செல்வங்களை அழித்தாலும், இயற்கையின் செல்வங்களான மரங்களையும், விலங்குகளையும் அழித்து விடாதீர்கள் எனும் கருத்தினூடு தமிழர் தம் இயற்கையை பேணும் பாரம்பரியம் வெளிப்பட்டு நிற்கிறது.

### அண்மைய முப்பதாண்டு வனவள மேம்பாட்டில் தமிழர் பங்கு

உலக வெப்பமயமாதல் விழிப்புணர்வு தோன்றிய எண்பதுகளில் தமிழ்நாடு முன்மாதிரியாக விளங்கி மர நடுகையையும் சூழல் பாதுகாப்பையும் முதலமைச்சர் எம்.ஜி இராமச்சந்திரன் தலைமையில் முன்னெடுத்ததன் சான்றுகள் இன்றும் தமிழ் நாட்டின் வீதியோரங்களில் சான்று பகர்ந்து நிற்கின்றன. ஈழத்தில் முதலாம் ஈழப்போரின் ஆரம்ப கட்டம் முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் மரம் நடுகை, இயற்கை விவசாயம் என்பவற்றை ஊக்குவித்தமையை எவரும் மறந்துவிட முடியாது. இதுவே இரண்டாம், மூன்றாம் ஈழப்போரின் போது மேன்மையடைந்து வனவள பிரிவென்ற

விக்கிரமன்

தனிப்பிரிவின் கீழ் வனவள, வனவிலங்கு பாதுகாப்பு, மேம்பாடு என்பன உரிய விழிப்புணர்வு, மேம்பாட்டு செயற்றிட்டங்கள் மற்றும் கடுமையான சட்டங்கள் என்பவற்றினூடு செயற்படுத்தப்பட்டு வந்ததை எவரும் மறந்து விட முடியாது. ஆனால் அவ்வாறு பேணப்பட்ட வனவளம் யாவும் 2009 இன் பின்னர் சிறீலங்கா அரச படைகளினால் சூறையாடப்பட்டு எமது தாயக வன வளம் சிதைக்கப்பட்டதும் தொடர்ந்து மின் வழங்கல், வீதி அபிவிருத்தி, பாதுகாப்பு, தொல்பொருள் பேணல் எனும் திரைகளின் பின் சிதைக்கப்பட்டு வருவதும் இனவழிப்பின் இன்னொரு பரிமாணமாகவே நோக்கப்பட வேண்டும். இவ்வகை இயற்கைவள அழிப்பிற்கும் அதனூடான இனவழிப்பிற்கும் எமது அரசியல்வாதிகளும், சுயநலம் மிக்க வியாபாரிகளும் துணை போவது மிகவும் வேண்டத்தகாததும், வேதனைக்குரியதும், வினைத்திறனுடன் முறியடிக்கப்பட வேண்டியதுமாக உள்ளது.




### வனவளமே எம்மின வளம்

எம்மின விடுதலையில் அதியுச்சம் தொட்ட முப்பதாண்டுகளும் இயற்கையோடிணைந்த வாழ்வை கொண்டிருந்ததும், “இயற்கை எனது நண்பன்” எனும் தலைவனின் வாசகமும் எம் மனத்தடத்தில் இருந்து அழிந்துவிடாமல் இருக்க வேண்டுமெனில், எம் இளைய தலைமுறை வனவள பாதுகாப்பிலும் இயற்கை வளம் பேணலிலும் முன்னின்று உழைக்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகிறது.

எனவே தாயகத்தின் இன்றைய இளைய தலைமுறை இதற்கான கிராமிய செயற் குழுக்களை அமைத்து செயற்படுவதுடன், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் என அனைத்து தரப்பினரும் வனவள பாதுகாப்பிற்கும் இயற்கைவள மேம்பாட்டிற்குமாக உழைக்க உறுதிபூண வேண்டும்.

அம்முயற்சிகளின் உந்துகோலாக புலம் பெயர் தேசமெங்கும் உள்ள எம் இயற்கைவள நிபுணர்கள் தாயக வனவள மேம்பாட்டிற்கான திட்டங்களை வரைந்து செயலுரு கொடுப்பதன் மூலம் எம்மின இருப்புக்கும், மேம்பாட்டுக்கும் மனிதகுல மேம்பாட்டிற்கும் வழிசமைக்க இன்றைய நாளில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

• • •